சிந்தனைவாதிகள் சத்திய சாதனை

டி. என். ராமச்சந்திரன்.

R
N50

சிந்தனைவாதிகளின் சத்திய சாதனை.

டி. என். ராமச்சந்திரன்.

இமயப் பதிப்பகம்,
நாகப்பட்டினம்.

முதற் பதிப்பு: ஏப்ரல் 1950.

விலை ரூ. 0—12—0

அச்சிட்டோர்:
தாரா அச்சகம்,
நாகப்பட்டினம்.

முகவுரை

அணுமயமாய் இருந்த பிரபஞ்சம், இன்று பல மகத்துக்களாய் மாறி வந்திருக்க, மனித உலகம் மாத்திரம் நீண்ட நெடுங்காலமாக தன் நடவடிக்கைகளிலும் – செயல் முறைகளிலும் குறிப்பிடத்தகுந்த சுபீட்ச நிலைமைக்கு மாறவில்லை.

இதற்குக் காரணம், நாம் உள்ளதை உள்ளபடி உணராததுதான்.

நாம் உள்ளதை உள்ளபடி உணர ஸயின்ஸ் உதவி மிக அவசியம். எல்லா ஞானத்தையும்விட ஸயின்ஸ் ஞானம் ஒன்றே சிறந்தது என்று ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் என்ற மாபெரும் ஞானி கூறியுள்ளார்.

ஆகவே ஸயின்ஸ் ஞானத்தைக் கொண்டு, அனுபவத்திற்கும், பரிசோதனைக்கும் ஒத்துவரும் விஷயங்களை நம்மவர்கள் சிந்திக்கவேண்டும் என்பதே நம் அவா.

அதற்காகவே, நாம் ஸர் ஆர்தர் கெய்த் என்ற மேனுட்டு சிந்தனைஞானி இவ்வாண்டு 'ராஷனலிஸ்ட்' சஞ்சிகையில் எழுதிய கட்டுரை ஒன்றை படித்ததும் அதன் கருத்தையொட்டிய விஷயங்களை தமிழ் உலகம் உணர வேண்டுமென்று விரும்பி — இச்சிறு நூலை எழுதத் துணிந்தோம்.

இந்நூலில் காணும் கருத்துக்களை யொட்டிய விஷயங்களை எழுதுவதற்கு எனக்கு ஆர்வமூட்டியவர், நம் நாட்டின் தொழிலாளர் இயக்கத்தின் தந்தையான காலஞ்சென்ற தோழர் **ம. சிங்காரவேலு செட்டியார்** அவர்கள் ஆவார்.

இந்நூலையொட்டிய கருத்துக்களை விரிவுபடுத்தி 'உடலும் உயிரும்' என்ற வேருெரு நூலை எழுதுகிருேம்.

தமிழ் உலகம், மேனுட்டு நல்லறிஞர் சாத்திரங்களைக் கற்றுப் பயன் பெறுமென்று நம்புகிருேம்.

வெளிவை,
23-3-50. } **டி. என். ராமச்சந்திரன்**

சிந்தனைவாதிகளின்

சத்திய சாதனை.

வாழ்க்கையில் உண்மையோடு நடப்பதில்தான் ஹக்ஸ்லி*க்கு பேரார்வம் அதிகமிருந்தது. உண்மை என்றால் என்ன என்று பலதிறப்பட்ட வியாக்கியானம் சொல்வதற்கு முன், ஹக்ஸ்லியின் வாழ்க்கையிலேயே சத்திய சோதனையாக ஏற்பட்டு, அவரது மனோ உலகையும், செயல் உலகையும் கிடுகிடுக்கச் செய்துவிட்ட ஒரு சம்பவத்தில் அவர் மேற்போட்டுக்கொண்ட நிலையை கவனிப்போம்.

இச்சம்பவம் அவரது அருமை மகன் நேயால் நான்காவது வயதிலே, எதிர்பாராது மரணமடைந்தது தான். இது 1860-ம் வருஷம் நடந்தது. அப்பொழுது ஹக்ஸ்லிக்கு வயது முப்பத்தைந்து; கல்யாணமாகி ஐந்தாவது வருஷம். அக்காலத்தில் ஹக்ஸ்லி இல்லறத்தை நல்லறமாகக் கொண்டு குடும்ப வாழ்க்கையில் லயித்திருந்தார். அவரது அருமை மகன் அவருக்கு "கண்ணின் கருமணியாக" விளங்கிவந்தான். இப்பேர்ப்பட்ட ஹக்ஸ்லிக்கு பேரதிர்ச்சியாக நான்கு வயது பாலன் இறந்தான் என்றபொழுது என்ன பாடு

---

* முழுப்பெயர்: தாமஸ் ஹென்றி ஹக்ஸ்லி.
பிறப்பு: 1825-ம் வருஷம் மே-மீ 4உ

பட்டிருப்பார்? அப்பொழுது அவரை தேற்றுவதற்காக அவரது நண்பர் சார்லஸ் கிங்ஸ்லே(கிருஸ்த)மதக்கோட்பாட்டுக்கிணங்க ஆறுதல் மொழி பகன்றூர். அதற்கு அவர் பதில் சொல்லும் வகையில் எழுதிய நீண்ட கடிதத்தில் கீழ்க்கண்ட வாசகங்கள் காணப்படுகின்றன இவைகள் நன்கு சிந்திக்கற்பாலன.

"நீங்கள் குறிப்பிட்டிருக்கிற அத்தனை விஷயங்கள் சம்பந்தமாக எனக்கு நல்லனவும், தீயனவுமான கருத்துக்கள் உண்டு. இம்முடிவுகள் நெடுங்கால, அமைதியான பரிசீலனைக்குப்பின், ஆழமாக என்னிடையே வேரூன்றியிருக்கிறது. ஆனல் எனக்கு ஏற்பட்ட பேரதிர்ச்சி என்னுடைய முடிவுகளை யெல்லாம், அஸ்திவாரத்தோடு தகர்த்தெறிந்துவிடுவனபோல் ஏற்பட்டது. ... என்னுடைய எண்ணத்திற்கான அத்தனை விஷயங்களையும் ஆராயலானேன். என்னுடைய குழந்தை, அருமை மனைவி, பெயர், புகழ் அத்தனையும் ஒன்றன்பின் ஒன்ருக, தண்டனைக்காக நான் இழப்பதாக இருந்தாலும் கூட அற்காக நான் ஒரு பொழுதும் பொய் சொல்லமாட்டேன்."

உண்மை வாழ்வு வாழ அதாவது சத்தியவாழ்வு வாழ அவர் கொண்டிருந்த தன்மையானது, ஏதோ ஒரு விஷயத்தை ஆராய்ந்து ஒரு முடிவுகாண விருப்பப்படுவதைப் போன்று மட்டுமல்ல, அது அவரது இயற்கை சுபாவமாக ஆழமாகியிருந்தது என்பது கவனிக்கத்தக்கது.

ஹக்ஸ்லிக்கு மேலே சொன்ன பேரதிர்ச்சியான சம்பவம் நிகழ்ந்த 1860-ம் வருஷத்தில்தான், டார்வினுடைய உயிர்களின் உற்பத்தி சித்தாந்தம்* தேசத்தில் பேரிடியாக ஆகியது.

ஹக்ஸ்லி, இதற்கு முன்னமே மனிதனுக்கும், வாலில்லாக்குரங்குக்குமுள்ள அமைப்பு ஒற்றுமையை† பரிசீலனை செய்வதில் முற்பட்டிருந்தார்.

இந்த பரிசீலனைகளின் முடிவினால் மனிதன் மனிதனையொத்த வாலில்லாக் குரங்கிலிருந்து நேரடியாகத் தோன்றவில்லையானாலும், வாலில்லாக் குரங்குகளின் மூதாதையர் எதுவோ, அந்த மூலத்திலிருந்துதான் மனித உற்பத்தி ஏற்பட்டதென்ற முடிவை டார்வினும் ஹக்ஸ்லியும் தீர்மானித்தார்கள்.

ஹக்ஸ்லிக்கு உண்மையைக்காண அதாவது மனிதனையொத்த உயிரின் மூதாதையைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று அவருக்கிருந்த உற்சாகத்தை பரிணாமவாதிகள்கூட, அதனை வீண் வியர்த்த வேலை என்று கூறினார்கள்.

ஆனால் ஹக்ஸ்லியோ, சிருஷ்டி கர்த்தனை நம்புகிறவர்களுக்குக்கூட எந்தவித கஷ்ட பிரச்னையையும் ஏற்படுத்தவில்லை.

ஏனெனில் 'சர்வ சக்தன்', 'உயிர்களின் கர்த்தன்' மனித ஹிருதயத்தை உண்மை ஞானத்தின் தெளிவு

* Origin of Species. † Structural relationship.

காணத் தக்கவாறு அமைத்திருக்கும் பொழுதும், அப் பேர்ப்பட்ட வாய்ப்புப் பெற்ற மனித ஹிருதயத்தில் மனசாட்சியையும் புகுத்தியிருக்கும்பொழுது உண் மைத் தெளிவுக்கு வருவது எங்ஙனம் தவறுகும்? அல்லது கடவுள் கோட்பாட்டுக்கு எவ்விதம் விரோத மாகும்?

மேற்கண்ட நிலையை ஆதாரமாகக்கொண்டுதான், ஹக்ஸ்லி சிருஷ்டிக் கடவுள் தன்மையை நிர்மூலமாக்கி யுள்ளார்.

இது நிற்க, மனிதன் உண்மையை நேசிப்பதற் கும் பொய்யை வெறுப்பதற்கும் பரிணுமவாதிகள் அல்லது சிந்தனுவாதிகள் எவ்வாறு காரணம் கூறுகிருர் கள் என்று கவனிப்போம்.

இதற்கு ஹக்ஸ்லியின் சொந்த வாழ்க்கை வரலாற் றிற்கே மீண்டும் செல்வோம். உண்மை வாழ்வு வாழ அவர் கொண்டிருந்த ஆர்வம், அவருடன் பிறந்திருந்த தன்மையா? அல்லது அவர் தானே மேற்போட்டுக் கொண்டதா? அவருடைய வாழ்வின் எக்காலத்தில் சத்திய வாழ்வின் விளக்கம் வெளியானது? இதற் கெல்லாம் பதில் சொல்லுவதற்கு அவரது சொந்த சுய சரிதை வரலாறு நமக்கு ஓரளவுக்கு துணைசெய்யும்.

"நான் எங்கள் மாவட்ட பாதிரி சர் ஹெர்பர்ட் ஒக்லே மாதிரி அழகாக அங்கமாக அப்படியே ஒத்திருந் தது போன்ற எண்ணமும், வீண் கௌரவமும்

என்னிடம் குடிகொண்டிருந்தது எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. ......நான் என்னுடைய ஆடைகளையெல்லாம் கோணலுமாணலுமாக பாதிரியாரின் மேல் அங்கி அணிகளைப்போல முன்னால் இழுத்து தொங்க வைத்துக்கொண்டு, சர் ஹெர்பர்ட் பாதிரியார் உபதேசிப்பதைப்போன்று எனது தாயாரின் வேலைப்பெண்களுக்கு உபதேசம் செய்த காக்ஷிகள் நினைவிலிருக்கிறது.

ஹக்ஸ்லியின் குழந்தைப்பருவ "ஆகாயக்கோட்டைகள்" இவ்விதமாகும்.

அவருடைய அருமைத் தாயாரைப்* பற்றி கூறும் வாக்கியங்களைக் கவனிக்கும் பொழுது அவருடைய உயரிய நல்லொழுக்கசீலம் நமக்கு நன்கு புலனாகும்.

"என்னுடைய தாயிடத்தில் நான் கொண்டிருந்த அன்பு அபரிமிதமாகும். என்னுடைய தாய்க்கு பிடித்தமாக நன்கு நடந்துகொள்வதே எனக்கு பெருத்த வெகுமதியாகவும்; அவளுடைய வெறுப்பை கொடிய தண்டனையாகவும் பாவித்தேன்... ... நான் எனது தாயின் சாயலை† அப்படியே கொண்டிருந்தேன். அவளிடத்திலிருந்த விசேஷ குணம்சம், மிகவிரைவாக ஒன்றின்மேலொன்றாக எண்ணங்களைக்கொண்டு சிந்திப்பதுதான். அவள் ஏதாவது ஒரு முடிவுக்கு வருவதில் போதிய நேரத்தை செலவு செய்யவில்லையென்று யாராவது துணிந்து எடுத்துச்சொல்வார்களேயானால், அவள்

---

* Rachel Withers. † Physically & Mentally

அது தன்னால் சாத்தியமில்லாமலிருக்கிறது; விஷயங்கள் ஒன்றன்பின் ஒன்றாக பரந்து வருகின்றன' என்று சொல்லிவிடுவாள். அவளுக்கிருந்த அந்த விசேஷாம்சம் பூர்ணமாக என்னிடையேயும் வந்துசேர்ந்துவிட்டது.''

ஹக்ஸ்லியின் தாயார், அவரது மகன் மீது நல்லொழுக்கத்தைப் புகுத்தினார் என்று ஒரு சாரார் சொல்லக்கூடும்; ஆனால் ஹக்ஸ்லிக்கே, இயற்கையாக விசேஷ ஆர்வமும், பற்றுதலும் அவரது நடத்தையில் இல்லாமலிருந்திருந்தால் அவள் முயற்சி அத்தனையும் பாழாய் போயிருக்குமன்றோ?

'நூலைப்போல சேலை' என்ற உண்மைச் சொல்லை போல 'இவர் தாயைப்போல பிள்ளை'யாயிருந்தார்.

ஹக்ஸ்லியின் தாயிக்கிருந்த 'எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாக பரந்துசெல்லும்' தன்மையதான வாய்ப்பு ஹக்ஸ்லிக்கு ஊடுருவியிருந்ததால்தான் பொய்யிலிருந்து மெய்யை, அதாவது உண்யையைப் பிரித்துப் பிரித்துத் தெரிந்துகொள்ள ஒரு வசதியாக இருந்தது. இந்த வாய்ப்பானது அவருக்குப் பிறவியிலேயே ஏற்பட்டதாகும்.

ஹக்ஸ்லி அவரது பதினைந்தாம் பிராயத்தின் குறிப்புத்தாளில் கீழ்வருமாறு எழுதியுள்ளார்:—

"டாக்டர் எஸ். ஸ்மித் எழுதியுள்ள ஆண்டவனின் பரலோக ஆட்சிபற்றிப் படித்தேன். சிலவற்றை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் அவரது சித்தாந்தங்களில்

பொது நம்பிக்கைக் கொள்வது, ஒழுக்க சம்பந்தமாக மிகக் கொடிய தீங்கான முடிவையே அது உண்டாக்கி விடுமென்று நான் கூறவேண்டியவனுகயிருக்கிறேன்... கொள்கையை தியாகம் செய்வது போலத்தான் பெரியதைப் போன்று ஒரு சிறிய தவறு செய்வதும்"

ஹக்ஸ்லிக்கிருந்த ஒழுக்க சம்பந்தமான ஆர்வத்தை நாம் ஒத்துக்கொள்வோம். அவரது விரிந்த மன சாட்சியானது சரியான முறையில் பயிற்றுவிக்கப் பட்டிருந்ததே அதற்குக் காரணமாகும்.

ஹக்ஸ்லி தன்னுடைய பதினேழாவது வயதில் கார்லைலின் சக்தியில் கலக்கலானுர். இதனுல் அவரது இருபதாவது வயதிற்குள் அவர் "போலித்தன்மைகளையும், ஹம்பக்குகளையும்" அடியோடு வெறுக்கும் உணர்ச்சியைப் பெற்ருர். இதனுல் கார்லைலிடமிருந்து உண்மையின் ஆர்வத்தைப்பெற்ருர் என்று கூறலாமா? அப்படியல்ல. கார்லைலினுடைய சொற்கள், ஹக்ஸ்லியினுடைய பக்குவ உள்ளத்தின் மனேநிலையில் பதிந்ததால் கார்லைலின் சொற்களுக்கு தக்க பலனேற்பட்டதென்று சொல்லிவிடுவதே பொருத்தமாகும். இவ்வாய்ப்பு அவருக்கு பிறவி பாரம்பர்யமாகும். ஹக்ஸ்லி ஒரு உண்மை நாடுவோராக, படிப்பால் அல்ல—பாரம்பர்யத்தாலேயே அப்பேறுபெற்ருர். சத்தியத்தில் அவருக்கிருந்த ஆர்வம், அவரது மனேதன்மையிலேயே நன்கு சிருஷ்டிக்கப்பட்டுவிட்டது.

இதுவிஷயமாக இன்னும் பரிசீலனை செய்வதற்கு அதாவது மனிதன் இயற்கையாக உண்மை பேச

விரும்புகிறுனு அல்லது பொய் பேச விரும்புகிறுனு என்று முடிவு கட்டுவதற்கு டார்வின் வாழ்க்கைக்குச் செல்வோம்.

ஹக்ஸ்லி 1825-ம் வருஷத்தில் பிறந்தபொழுது, டார்வின் பதினுறு வயது பையனுக எடின்பர்க் சர்வகலாசாலையில் நாடோடியாக காலங்கழித்து வந்தார். டார்வின் தன்னுடைய எண்பத்தெட்டாவது வயதில், தன்னுடைய குடும்பத்தார்களின் பிரயோசனத்திற்காக எழுதிவைத்துள்ள அவரது பால்ய வரலாற்றில் காணப்படுபவை கவனிக்கத்தக்கது.

* * *

சார்லஸ் டார்வின், ஷ்ரூஸ்பரி என்ற நகரத்தில் 1809-ம் ௵ பிப்ரவரி-மீ 12உ பிறந்தார். அவருடைய தந்தையார் விஞ்ஞான புகழ்கொண்ட செல்வாக்கு மிகுந்த டாக்டராவார். டார்வின் ஒன்பதாவது வயதிலிருந்து பதினுறுவது வயது வரை ஷ்ரூஸ்பரி இலக்கணப் பள்ளிக்கூடத்தில் பயின்ருர். இவரது ஒன்பதாவது வயதிலேயே இவர் அருமைத் தாயை இழந்தார். இவரது ஆரம்பப்பள்ளி படிப்பைப்பற்றி "தன்னுடைய மனேஅபிவிர்த்திக்கு அதைவிட மோசமானது எதுவுமிருக்க முடியாது" என்று கூறியுள்ளார்.

இவ்வாரம்பப்பள்ளியில் பழைய இதிகாசமும், சிறிது புராதன பூகோளமும், சரித்திரமும் சொல்லிக்

கொடுக்கப்பட்டது. கணிதமோ, அக்கால மொழிகளோ கற்பிக்கப்படவில்லை.

இவர் ஆரம்ப வயதிலிருந்தே புல்பூண்டு, தரையில் புரண்டு படரும் செடி கொடிகள், பாசிகள், கிளிஞ்சல்கள் முதலானவைகள் சேகரிப்பதிலும் இயற்கை உயிர் விஷயத்திலும் ஆர்வம்காட்டி வந்தார். இவர் வயது ஆகஆக இவரது நடத்தை தந்தையாருக்குப் பிடித்தமாகக் காணப்படவில்லை. இவர் மரப்பொந்தில் வாழும் தேரையையும், தெருவில் போகும் நாயையும் வீட்டில் ஓடும் எலியையும் பிடித்து வதம் செய்வதை குடும்பத்திற்கு கேவலம் என்று இவரது தந்தையார் கருதி இவரது சகோதரரோடு வைத்தியப் படிப்புக்காக எடின்பர்க் சர்வகலாசாலைக்கு அனுப்பப்பட்டார். இவருக்கு வைத்திய ஞானம் பிடித்தமாக இல்லை. ஆனால் இயற்கை வரலாறு நூல் இவரை மிகவும் கவர்ந்தது.

டார்வினின் தந்தையார், டார்வினுக்கு வைத்திய சாஸ்திரத்தில் பற்றில்லையென்று உணர்ந்ததும், டார்வினை மத குருவாக்க விரும்பினார். டார்வின் மிக அக்கரையோடும், பொருப்போடும் மத ஆகம நூல்களைப் பயின்றார். ஆனால் இந்தப் படிப்பில் இவருக்கு பிடிப்பு ஏற்படவில்லை. பழையபடியே பறவைகளையும், மிருகங்களையும் வேட்டையாடுவதிலும், சுட்டுத் தள்ளுவதிலும், அவைகளை பரிசீலனை செய்வதிலும் இவர் காலங்கழித்தார். இவர் சீட்டாடவும், குடிக்கவும் பழகியிருந்தாராலும் இவருக்கு ஸயின்ஸில் அலாதி அக்கரை இருந்துவந்தது.

ஒரு சமயம் இவர் பழைய மரப்பட்டையை உரித்தார். அப்பொழுது அகப்பட்ட இரண்டு பூச்சிகளை கையில் ஒவ்வொன்றாகப் பிடித்து அதனைக் கூர்ந்து கவனித்து வந்தார். அப்பொழுது மூன்றாவது புது மாதிரி பூச்சி ஒன்றும் காணப்பட்டது. உடனே கையிலிருந்த பூச்சியை வாயில் போட்டுக்கொண்டு புதியதைக் கையில் பிடித்தார். வாயில் விழுந்த பூச்சி வாயிலேயே ஏதோ திரவ பதார்த்தத்தை கழிந்து விட்டது. அது உடனே நாக்கை சுடவும், எரிக்கவும் ஆரம்பித்துவிட்டது. அதனால் அவர் கையில் பிடித்திருந்ததையெல்லாம் இழக்க வேண்டியதாயிற்று.

* * *

அவரது எட்டாவது வயதில் நடந்தது கீழ்க்கண்டவையாகும். தன்னுடைய வாழ்நாளையே, உயிர்களின் உண்மையைத் தெரிந்துகொள்ள முற்பட்ட ஒரு பெரியார் தன்னுடைய சின்னஞ்சிறு வயதில் ஒரு பொய்யனாகக் காணப்படுவது கவனிக்கத் தக்கது.

“இந்த வருஷத்தில் (என் எட்டாவது வயதில்) ஏற்பட்ட ஒரு சிறு சம்பவம் என் மனதில் ஆழ்ந்து கிடக்கிறது. இது என்னை பிற்காலத்தில் ரொம்ப வருத்தியது. தண்ணீரோடு பல வர்ண திராவகங்களைப் பாய்ச்சுவதால் பலதிறப்பட்ட வர்ணஜால புஷ்பங்களை என்னால் உண்டாக்க முடியுமென்று ஒரு அசாத்தியமான கட்டுக் கதையை ஒரு சிறு பையனிடம் கூறியுள்ளேன்...... மற்றும் நான் சிறு பையனாக இருக்கும்

பொழுது மற்றவர்களுக்கு ஆச்சர்யத்தை உண்டாக்க வேண்டுமென்பதற்காகவே, அபார பொய்களை சிருஷ்டி செய்வதில் அதிக கவனஞ்செலுத்தினேனென்று நான் ஒத்துக்கொள்கிறேன்'' என்று டார்வின் சுயசரிதையில் கூறுகிறார்.

இந்த உண்மை வரலாற்றிலிருந்து, அநேக சிறுவர் சிறுமியர்களைப்போல டார்வினும் உண்மை பேசுவதை விட பொய் பேசுவதில் இயற்கை சுபாவம் கொண்டிருந்தார் என்று நாம் துணிந்து சொல்லிவிடலாம். ஆனால் அவருடைய பொய்கள் மட்டரகமானவைபல்ல. அவருடைய பொய்கள், மற்றவர்களால் உயர்வாகக் கருதப் படவேண்டுமென்பதற்காக எழுப்பப்பட்ட கற்பனைகளாகும். டார்வின் "ஆகாயக் கோட்டைக்காரர்" "பகல் கனவு காண்பவராக" இருந்தார். டார்வின் கற்பனை கதைகளை மட்டுமல்ல, மற்றவர் சொல்லும் கற்பனைக் கதைகளையும் தங்கு தடையின்றி அப்படியே கேட்டுக்கொண்டுவிடுவார். அவர் பையனாக இருக்கும் பொழுது, அப்பட்டமாக பிறர் சொல்வதையெல்லாம் நம்பிவந்ததாக அவரே ஒத்துக்கொள்கிறார். இது ஒரு வகையில் குறிப்பிடத்தகுந்த அம்சம். ஏனெனில் பின் அவரது வாழ்வில், எதையும் ஆராய்ந்து அறிவதில் அதிக அக்கரையும், ஜாக்கிரதையும் செலுத்துவதில் ஈடு இணையற்றிருந்தார் என்பதாலேயாம். எடின்பர்க் சர்வகலாசாலை மாணவனாக இருந்த வரலாற்றை அவர் சொல்வதிலிருந்து அவர் பதினேழாவது வயதிலேயே தனக்கு

ஸயின்ஸை உண்மையைத் தேடுவதற்கான ஒரு சாதக மாகக் கொண்டார் என உணர்கிறோம்.

அவர் தன்னுடைய இருபத்திரண்டாம் வயதில் பீகில்* கப்பலில் தாவரஜீவவாதியாக† சஞ்சரித்த பொழுது, அவர் விஷயங்களை நுணுக்கமாகக் கவனிக்க தன்னை தயார் செய்துகொண்டிருந்தார். அதோடு அவரது பரிசோதனைகளை தாள்களில் குறித்துவைத் துக்கொள்ளவும் அதனைக் கொண்டு தன்னுடைய பரிசீலனைகளை சரிபார்த்துக்கொள்ளவும் வழிவகை செய்து கொண்டிருந்தார்.

உண்மையை உணர டார்வின் அளவுக்கு சிரமப் பட்டதாக வேறு ஒருவரை ருசுவோடு கண்டுபிடிப்பது கஷ்டமாகும். உண்மையை நாடுவதில் அவருக்கிருந்த ஆர்வம், அவருக்குள்ளேயே கிளர்ந்தெழுந்ததெனலாம். அது அவரது மனோநிலையாகவும், மனப்போக் காகவும் பிறவியிலிருந்தே ஊடுருவியிருந்தது.

இவைகளிலிருந்தெல்லாம் டார்வினிடம் ஆரம்பத் தில் பொய்சொல்லுகிற ஒரு ஆதி தன்மை இருந் ததையும், பின் உண்மை ஆராய்கிற ஒரு தன்மை யிருந்ததையும் கொண்டு இரு நேர் முரணான தன்மைகள் பிறவியிலேயே இருந்தனவா என்ற கேள்வி எழக் கூடும். இதுவே மிக்க உண்மையான பிரச்னையாகும்.

பிறவியிலேயே டார்வின் மட்டுமல்ல, ஒவ்வொரு வரிடமும் இவ்விரண்டும் கலந்திருந்து வருகின்றன

---

* Beagle. † Naturalist.

என்பதுதான் தவிர்க்கக் கூடாத உண்மையாகும். இது பற்றி இன்னும் விரிவாக ஆராய மற்றொரு பரிணாம வாதியும் சிந்தனாவாதியுமான ஹெர்பர்ட் ஸ்பென்ஸரின் வரலாற்றினைக்கொண்டு மனோ இயற்கைகளைக் கவனிப் போம்.

*   *   *

அதற்குள் டார்வின் சித்தாந்த வரலாற்றினை பரிசீலனை செய்வோம்.

டார்வின் கண்ட உண்மை கீழ்வருமாறு:- செடி கொடிகளானாலும் சரி, மிருக இனங்களானாலும் சரி, எல்லா உயிரினங்களும் இறுதி வரை வாழ்வதற் காகவே போராடிக் கொண்டிருக்கின்றன. இந்தப் போராட்டத்தின் நிமித்தத்தாலேதான் உயிரினங் களின் தோற்றமும், அமைப்பும், பழக்க வழக்கங் களும் மாறுபாடடைகின்றன. உயிரினங்களுக்குள் ஓயாது நடைபெறும் போராட்டங்களால், அறிவுத் திறன் அதிகம் படைத்தவைகள் மிஞ்சியும், அறிவு குறைந்தவைகள் அழிந்தும் வந்தன.

மேலே சொன்ன வாழ்க்கைப் போராட்டத்தால் எல்லா உயிர்களிலும், அதற்கான சௌகர்ய வேறு பாடுகள் ஏற்பட்டன. இதனால் உயிரின் வேறுபாடுகள் வாழ்க்கைப் போராட்டத்தின் விளைவு ஆயிற்று.

இந்த தேர்ந்த முடிவோடு தகுதி வாய்ந்த உயிரி னங்கள், தகுதியடையாத உயிரினங்களை அழித்துப் பெருகுவதையும் - இதனாலெல்லாம் புதுவகை உயிரி னங்கள் உண்டாவதையும் இயல்பு என்று டார்வின் முடிவாகக் கண்டுபிடித்தார்.

இதற்கு முன்னரே டார்வின், சகல உயிரினங்களுக்குள்ளும் நெருங்கிய தொடர்பிருப்பதையும், செடி கொடிகளுக்கும், விலங்குகளுக்குமுள்ள ஒருமைத் தொடர்பையும் கண்டுபிடித்திருந்தார்.

பொதுவாக அண்டசராசரங்களையும், உலகத்தையும், அதில் உள்ள உயிரற்றவைகளையும், உயிர் வாழ்வனவைகளையும் எல்லாம் வல்ல கடவுள் படைத்தார் என்றும், கடவுள் படைப்புகளில் சிறந்தது மனிதன் என்றும், இந்த மனிதனை கடவுள் தன்னைப்போன்ற அமைப்பில் படைத்தார் என்றும், இதனால் மனிதன் கடவுள் தன்மை வாய்ந்தவன் என்றும் பெரும்பாலோர் கருதி வந்தார்கள். இதோடு மனிதன் வாழும் பூமி மிகப் புண்ணியமானதென்றும், பாக்கியமானதென்றும் கருதி இந்த பூமியை சூரிய சந்திரர்களும், நட்சத்திரங்களும் சுற்றிச்சுற்றி வருவதாக கூறி வந்தார்கள். இந்தக் கருத்துகளுக்கெல்லாம் விரோதிகளாகத் தோன்றியவர்கள்தான் சார்லஸ் டார்வினும், கலீலியோவுமாகும்.

டார்வின் சித்தாந்த ஆராய்ச்சிக்குப் புகுமுன் கலீலியோ கண்டு பிடித்த உண்மையைக் கூறிவிடுதல் பொருத்தமுடையதாகும்.

கலீலியோ, தூரதிருஷ்டிக் கண்ணாடியைக் கண்டு பிடித்தவர். நாம் வாழும் பூமியானது அண்ட கோளத்திற்கு நடுவே அசையாமல் இருப்பது அன்று; சூரியன் பூமியைச் சுற்றி வரவில்லை; பூமிதான் சூரியனைச் சுற்றி

வருகிறது என்று கண்டுபிடித்தார். மற்றும் பூமியை விட பலஆயிரமடங்கு பெரிதான பல்லாயிரநட்சத்திரங்களும், மற்றைய கிரகங்களும் இருக்கின்றனவென்றும் பூமியானது அவைகளுக்கு ஒப்பிட்டால், அணுவைப் போன்று அவ்வளவு சிறியதென்றும் தெரிவித்தார். இதனால் மேலுலகத்தில் சுவர்க்கம் - அதிலே கடவுள்; நடுவிலே பூமி - அதிலே மனிதன்; கீழுலகத்தில் நரகம் - அதிலே பாபிகள் என்றெல்லாம் பிரபஞ்சத்தைப்பற்றி நம்பிக்கைக் கொண்டிருந்த அக்கால மக்கள் கலீலியோவின் கருத்துக்களை இகழ்ந்ததோடு, அவரை கடவுள் நம்பிக்கையற்றவர் என்று நிந்தித்து வழக்குத் தொடர்ந்து அவருக்கு தண்டனையை அளித்தார்கள். இதற்கப்பால் டார்வின் சித்தாந்தம் வெளியானது.

கடவுள் சூரிய சந்திர நட்சத்திரங்களைப் படைத்த பெருமையை கலீலியோ நீக்கினார். அதோடு டார்வினோ, மனிதன் கடவுள் தன்மை வாய்ந்தவன் என்பதையும், அவன் கடவுள் அம்சமானவன் என்பதையும் நிர்மூலமாக்கிவிட்டார்.

டார்வின் மனிதனை ஒரு மிருகம் என்றும், அவன் ஒரு புராதன மிருகத்திலிருந்து ஏற்பட்டானென்றும் கூறினார். அதோடு பரிணாமத்தில் மனிதன் கடைசியாக இப்போது ஏற்பட்டிருக்கிறானென்றும், அதோடு கூட கடவுளுக்கும் மனிதனுக்குமுள்ள ஒற்றுமையைவிட மிருகங்களுக்கும், அதாவது மனிதக்குரங்கு போன்ற மிருகங்களுக்கும் அதிக ஒற்றுமையிருக்கிறதென்றும்

நிரூபித்தார். இந்த சித்தாந்தத்திற்கு டார்வினிஸம் என்று பெயர்.

இந்த சித்தாந்தத்தை கேட்ட உலகம் அவரை நாத்திகர் என்று நிந்திக்கத் தலைப்பட்டது. மனிதன் கடவுளால் சிருஷ்டிக்கப்படவில்லை; பல கோடி உயிர்களைப்போல மனிதனும் மிருகாதிகளிலிருந்து மாறி வந்திருக்கிறான் என்ற சித்தாந்தம் சகல மத உலகத்தின் அஸ்திவாரத்திலும் கையைவைத்து மதங்களுக்கெல்லாம் கடைசி சாவுமணியை அடித்தது.

டார்வின் சித்தாந்தம் முதலில் வெளியானபோது மிருக மனித எலும்புகள் கண்டெடுக்கப்படவில்லை. அதன் பிறகு, கடந்த இருநூறு வருஷத்திற்குள் பலவித மிருக மனித எலும்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ஜாவா தீவில், பிதகாந்தரோபஸ் என்ற ஓர் குரங்கு மனித எலும்பு கண்டெடுக்கப்பட்டது. அதோடு பிதகாந்தரோ பஸுக்கு மேலான மிருக மனிதனுடைய எலும்புகளும் அகப்பட்டன.

சில வருஷங்களுக்குள் சீன தேசத்தில் ஆதி குரங்கு மனித எலும்பு ஏராளமாக கண்டெடுத்ததிலிருந்து, மனிதன் ஓர் புராதன மிருகத்திலிருந்து ஏற்பட்டவனென்பதை மறுக்கவல்லார் யாருமில்லாது போயினர். இந்த பூர்வீக மிருக மனிதர் சில லட்சம் வருஷங்களுக்கு முந்தி, நமது மூதாதைகளாக உலகில்

ஜீவித்திருக்கலாமென்ற உத்தேசம் மேற்கண்ட எலும்புகளால் தெரியவருகின்றது.

நமது மனித மூதாதைகள், சற்றேறச்குறைய சில லட்சம் வருஷங்களுக்கு முன்னர் மிருகங்களாக, அடர்ந்த தோப்புகளிலும், குகைகளிலும், நதி ஓரங்களிலும் வாழ்ந்து வந்தார்களென்பது மறுக்கமுடியாத உண்மை.

சுமார் நான்கு, ஐந்து லக்ஷ வருஷத்திற்கு முன், நமது குரங்கு மனித முன்னோர்கள் வாழ்ந்திருந்த இடங்களை நாம் இன்றைக்கும் பார்க்கலாம். அவர்கள் உபயோகித்து வழங்கிய பழங்கால ஆயுதங்களையும் பார்க்கலாம். அந்த காலத்திலேயே நமது மிருக மனித முன்னோர்கள் உருவத்தில் ஒருவருக்கொருவர் வித்தியாசமடைந்திருந்ததையும் பார்க்கலாம்.

அந்தக் காலங்களில் சிற்சில தூர தேசங்களில் மூன்று நான்கு வித மிருக முன்னோர்கள் இருந்துவந்ததாகத் தெரிகிறது. ஜாவா தீவில் சுமார் 5, 6, லக்ஷ வருஷத்திய புராதன ஓர்வித குரங்கு மனிதனுடைய கபால எலும்பும், தாடை எலும்பும், தொடை எலும்பும் அகப்பட்டன. அந்த எலும்புகளிலிருந்து தெரிய வந்த விசேஷம் என்னவெனில், அந்த எலும்பைப் படைத்திருந்த ஓர் உருவம், வாலில்லாக் குரங்கின் தலையைப் போன்று, முகவாய்க்கட்டை இல்லாத உருவமாகவும், வாலில்லாக் குரங்கின் மூளையைவிட பெரிய மூளையை பெற்றிருந்ததாயும், நேர் நிமிர்ந்து

நடக்க சக்தி பெற்றதாயும் இருந்ததாக யூகிக்கப்படு கின்றது. ஏறக்குறைய அதே காலத்தில் இங்கிலாந்து தேசத்தில் பில்டவுன் என்ற கிராமத்தில் ஓர்வித மிருக மனிதன் வாழ்ந்திருந்ததாகவும் தெரியவந்தது. இந்த பிராணியின் உருவம் ஏறக்குறைய மனிதனாகவும், சற்று குரங்கு வடிவத்தைப் பெற்றிருப்பதையும் காண நேர்ந்தது.

சில வருஷத்திற்குமுன், சீன தேசத்தின் பீகிங் நகரத்தினருகே, ஒரு மிருக மனித கூட்டத்தாருடைய முழு எலும்புகள் அகப்பட்டதிலிருந்து இவர்களும், ஆதிகாலத்தில் சீன தேசத்தில் வாழ்ந்திருந்ததாகத் தெரிகிறது. இவர்களுடைய எலும்புகளுக்கும், இங்கிலாந்தில் வாழ்ந்திருந்த ஆதி மிருக மனித எலும்புகளுக்கும், ஜாவா தீவில் அகப்பட்ட ஆதி மிருக மனித எலும்புகளுக்கும் சொற்பவித்தியாசமே ஒழிய,பெரும்பாலும் இம்மூவரும் உருவத்தில் ஒத்திருந்திருக்கின்றனர்.

இம்மூவர் குலத்திலிருந்து தற்கால மனிதர்களாகிய நாம் மாறி வந்திருப்போமா என்பது சொல்வதற்கில்லை. ஒரு காலத்தில் நமது நேர் முன்னோர்கள் தோன்றுவதற்குமுன், பற்பல மிருக முன்னோர்கள் உலகில் திரிந்துகொண்டு வாழ்ந்திருந்ததாகக் கூறலாம். இவர்களைப் போன்ற ஒரு கூட்டத்தாரிலிருந்து நமது முன்னோர்கள் மாறிவந்தார்களோ அல்லது இவர்களுக்கு வேறுவித பங்காளிகளாக இருந்த மிருக முன்னோர்களிடத்திலிருந்து மாறிவந்தார்களோஎன்பதும் யூகிக்க வேண்டிய விஷயங்களே.

மற்றும் சமீப காலத்தில் ஓர் பெண் உருவத்தின் எலும்புகள், லண்டன் நகரத்தினருகே அகப்பட்டன. எலும்பைப் பரிசோதிக்கும் விற்பன்னர் இந்த எலும்பைப் பெற்றிருந்த குரங்குப் பெண், நமது ஆதி முன்னோராக இருக்கலாமென யூகிக்கின்றார்கள்.

பொதுவாக மனித உற்பத்தியின் பிரச்னை டார்வினால் விளக்கமுற்றுள்ளது. மனிதன் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவனல்ல. இவன் பலகோடி வருஷங்களாக பூண்டாய், புழுவாய், மிருகமாய், குரங்காய், மனிதக் குரங்காய், குரங்கு மனிதனாய் மாறி, சென்ற 3 லக்ஷவருஷத்திற்கு முன்பாக தற்கால மனிதனாக மாறி, பல காலம் காட்டுமிராண்டியாய் வாழ்ந்து, பின் நாகரிக மனிதனாய் மாறிவந்திருக்கிறான் என்பதே விஞ்ஞானம் ஸ்திரப்படுத்திவரும் சாதனையாகும்.

பொதுவாக, இதுவரை பூமியில் கண்டெடுத்த பூர்வ மிருக மனிதர் எலும்புகளிலிருந்து நமது ஆதி முன்னோர் எவ்வித உருவத்திலிருந்து படிப்படியாக மாறிவந்திருக்கலாமென்பதை நாம் வரிசைக்கிரமமாக கண்களால் இன்றைக்கும் பார்க்கலாம். இதனை எடுத்துக் காட்டிவரும் விஞ்ஞானிகளில் ஸர் ஆர்தர் கெய்த் என்பார் முக்கியமானவர்.

மனிதன், மதப் புத்தகங்களில் சொல்லியுள்ளபடி கடவுளால் பிண்டமாகவோ அல்லது மண்ணாலோ செய்யப்பட்டவன் என்றால், மனித உருவத்திற்கும், மற்ற மிருக உருவங்களுக்கும் அவ்வளவு ஒற்றுமை இருப்பானேன் என்று ஸர் ஆர்தர் கெய்த் கேட்கின்றார்.

கட்டட ஒற்றுமை, கற்ப வளர்ச்சி ஒற்றுமை, இரத்த ஒற்றுமை ஆகியவை மிருகங்களுக்கும் இருந்து வருவானேன்? எல்லா உயிர்களும் புல், பூண்டு, விருட்சம், புழு, பூச்சி, நகர்வன, பறப்பன, நடப்பனவெல்லாம் ஒரு சிறு கிருமி முட்டையிலிருந்து வளருவானேன்? என்கிற விஷயங்கள் சிந்திக்க வேண்டியவைகளாகும்.

எல்லா உயிர்களும் ஒரு காலத்தில் ஒரு கிருமி வித்திலிருந்து வளர்ந்து மாறிவந்தபடியால் எல்லா உயிர்களும் ஜனிக்கும்போது, சிறு கிருமி உருவத்திலிருந்து முளைக்கின்றனவென்பதுதான் நமது யுக்திக்கும், அனுபவத்திற்கும் பொருந்தி இருக்கின்றது. அப்படிக்கில்லாமல், அந்தந்தஉருவம் அப்போதப்போதே அந்தந்த உருவமாக கடவுளால் சிருஷ்டி செய்யப்பட்டனவென்பது சரியல்ல என்று எடுத்து சொல்கிறார் ஸர்ஆர்தர் கெய்த்.

அணுக்களிலிருந்து மகத்தானவஸ்துக்கள் உண்டாவது வெள்ளிடைமலே. சிறு முட்டையிலிருந்து, உயிர்கள் யாவும் உண்டாவதும் கண்கூடு. தாய் வயிற்றில் மனித முட்டை மனித உருவாக மாற 9 மாதம் செல்கின்றது. ஆதி கிருமி முட்டை மனிதனாக பரிணமிக்க, அதாவது மாறிவர 100 கோடி வருஷம் பிடித்திருக்கிறது. ஒன்று, வேறொன்றிலிருந்து மாற காலவித்தியாசமே வேண்டும். 300 கோடி வருஷமாக கிருமியாய், புழுவாய், மீனாய், ஊர்வனவாய், மிருகமாய் வெளியில் மாறிவந்த மனிதன், 9 மாதத்தில் தாய் வயிற்றில்

கிருமியாய், புழுவாய், மீனாய், ஊர்வனவாய், மிருகமாய் மாறிவந்து, கடைசியில் மனிதனாக பிறக்கின்றான்.

மனிதன் தன் தாய் கர்ப்பத்தில் வளரும்பொழுது கை கால்கள் தோன்றுவதற்கு முன், ஐந்து ஆறு வாரக் கருவில் வாலொன்றைக் காட்டிக்கொண்டு வளர்கிறான்.

தாய் வயிற்றிலிருந்து ஜனித்ததும், மனிதன் நாகரிகமானவனாக நடக்கின்றானா? அதுதான் இல்லை. பிறந்த பத்து வருஷத்து சிறு பிள்ளை நடத்தைகள், மிருகங்களுக்கு ஒப்பிடலாமேயொழிய, மற்ற நாகரிக மனிதனுக்கு ஒப்பிட முடியாது. இது ஏன்?

நமது மூதாதையார் பல லட்ச வருஷங்களாக காட்டுமிருகத்தனத்திலிருந்து நாகரிகத்திற்கு மாறி வந்தபடியால், நாமும் பிறந்த சுமார் பத்து வருஷம் வரை, காட்டுமிராண்டித்தனத்தை நிரூபித்துக்கொண்டு இருந்து வருகிறோம். பின்புதான் நாகரிக வாழ்விற்குரிய நடவடிக்கைகளை காட்ட ஆரம்பிக்கிறோம். அநேகர் பால்யவயது கடந்தும், காட்டுமிராண்டித் தன்மையிலே இருந்து வாழ்கின்றனர்.

பொய், சூதுவாது, மோச நாசம், கொலை களவு, சண்டை முதலிய அநாகரிக நடவடிக்கைகள் யாவும் நமது பூர்வ காட்டுமனித மூதாதையர்களிடமிருந்தே நாம் பெற்றுள்ளோம். மற்றும் பெரும்பான்மையான நமது நடவடிக்கைகள் நமது மூதாதையர் மூலமாகத் தான் வரப்பெற்று வந்துள்ளோம். எதுவும் ஆகாயத்தி

லிருந்து குதித்துவிடவில்லை. நமது திரேகமும், நமது நடவடிக்கைகளும் நமது புராதன மிருக மூதாதையரிடமிருந்தே நாம் கொண்டுவந்துள்ளோமென்பது தான் ஒப்பமுடிந்த ஸயின்ஸ் உண்மையாகும். இனியும் எதிர்காலத்தில் நமது திரேகமும், நமது நடவடிக்கைகளும் மாறிக்கொண்டே போகும். இதுவே டார்வினிஸம் நமக்கு அறிவிக்கும் ஞானம்.

* * *

இனி நாம் எடுத்துக்கொண்ட விஷயமாகிய மனோ இயற்கையினைக் கவனிக்க சர் ஹெர்பர்ட் ஸ்பென்ஸரின் வாழ்க்கைக்குப் போவோம்.

ஹெர்பர்ட் ஸ்பென்ஸர், டார்வின் பிறந்த பதினேரு வருஷங்களுக்குப் பின்னும், ஹக்ஸ்லிக்கு ஐந்து வருஷங்களுக்கு முன்னும் 1820-ம் வருஷத்தில் பிறந்தார். இவர் தன்னுடைய சுயசரிதை வரலாற்றினை எழுதியுள்ளார். இதில் தன்னுடைய பால்ய வயது விவகாரங்களையும் நன்கு கூறியிருக்கிறார். ஆகவே ஸ்பென்ஸரின் வாலிபப் பருவத்தை ஹக்ஸ்லி எந்த கண்ணோட்டத்தோடு பார்வையிட்டார் என்று கவனிப்போம். ஹக்ஸ்லி, ஸ்பென்ஸருக்கு 1886-ம் வருஷம் நவம்பர் -மீ 25உயன்று கீழ்க்கண்டவாறு எழுதியிருக்கிறார்.

" நான் தங்களின் பாலப்பருவ வரலாற்றினை மிக்க விருப்போடு படித்தேன். அதில் மனிதனை அறிந்து கொள்வதற்கு எதுவும் துணைசெய்வதாயில்லை. வேறு என்னை திருப்திக்காளாக்கிய விஷயம் என்னவென்றால்,

விஷயங்களுக்கு காரணகாரியங்களை வினவுதலும், அதிகாரபூர்வமாக எதையும் ஒத்துக்கொள்ளாததுமான என் வாலிப வயது சுபாவமும், தங்களுடையதைப் போன்றே ஞாபகத்திற்கு வருகின்றன. ......நான் விஷயங்களை கிரகிக்க மிகவும் ஆர்வம் கொண்டிருந்தேன்."

ஸ்பென்ஸர் தன் குழந்தைப் பருவத்தில் பொய் சொன்னதாக எங்கும் ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால் 'பகற்கனவு' கண்ட வரலாறுகளும், 'ஆகாயக் கோட்டை' சிருஷ்டிகளும் காணப்படுகின்றன. அவருடைய பால்ய வரலாற்றில் அவரே சதா வீரராகத் திகழ்கிறார்.

ஸ்பென்ஸர் தன் 'பகல் கனவு வரலாறுகள்' காலத்திற்குப்பின் கட்டுக்கதைகளைப் படிப்பதில் கவனங் கொள்ளலானார். அவருடைய தந்தையார் நாவல் படிப்பதால் குழந்தைகள் மனம் பாழாகிவிடுமென ஸ்பென்ஸரை கடிந்துரைத்தார். இருந்தாலும் அவர் நாவல் படிப்பதில் பூரண அடிமையாகியிருந்ததால் — அவர் அவரது பெற்றோர்களை முழுதும் ஏமாற்றியே வந்தார். ஸ்பென்ஸர்பொய்சொல்லுகிற சுபாவத்தோடு பிறந்தாக அவர் ஒத்துக்கொள்ளக் காணோம். ஆனால் அவர் 1858-ம் வருஷத்தில் கல்வியைப்பற்றி குறிப்பிடும் பொழுது கீழ்க்கண்டவாறு குழந்தைகளைப்பற்றி பொதுவாகக் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

"பாமர்ஸ்டன் பிரபு சித்தாந்தத்தைப் போல 'எல்லாக்குழந்தைகளும் நல்ல குழந்தைகளாகவே பிறக்

கின்றன' என்று நம்புகிறவர்கள் கோஷ்டியில் நாம் இல்லை. மொத்தத்தில் அதற்கு நேர் எதிர் மறையான கருத்தும் சரியல்ல. என்றாலும், எதிர் மறையான கருத்து பாமர்ஸ்டன் சித்தாந்தத்தைவிட உண்மைக்கு நெருங்கிய தன்மையதாக நமக்கு காணப்படுகிறது."

குழந்தைகள் 'நிரபராதிகள்' என்ற பொதுக் கருத்து பொதுவாக அறிவு ஞானத்தைப் பொருத்து சரியே. ஆனால் கெட்ட தூண்டுதல்கள்* சம்பந்தமாக குழந்தைகள் நிரபராதிகள் என்று சொல்வது முற்றிலும் தவறே. இதன் உண்மையைத் தெரிந்துகொள்ள விரும்புகிறவர்கள் குழந்தைகள் வளர்ப்பு இடங்களில் அரை மணி நேரம் ஊன்றி கவனித்தால் போதிய உண்மை ஞானத்தைப் பெறலாம்.

ஸ்பென்ஸர் பொய்யரென்ற மனோநிலையில் பிறக்கவில்லையென்று நம்மால் சொல்ல முடியாவிட்டாலும் அவர் உண்மை நாடுவோராக மனோபாவம் கொண்டிருந்தார் என்று நாம் நிச்சயமாக சொல்லலாம்.

அவர் குழந்தையாக இருந்தபோது விஷயங்களுக்கு விளக்கம் கோறினார். அவர் அதிகாரத்திற்கும், ஆதிபத்யத்திற்கும் தலைகுனிய மறுத்தார். இயற்கையாக அவர் பகுத்துணர்பவராகவும், காரணகாரியமின்றி நம்பாதவராகவுமிருந்தார். இதிலிருந்தெல்லாம் ஸ்பென்ஸர் உண்மை நாடுவோராக காணப்பட்ட முயற்சிகள் அத்தனையும் அவர் பிறவியிலேயே ஏற்பட்டதாகும். இது அவர் தேடிப் பெற்ற பேறு அல்ல.

---

* impulses.

ஹெர்பர்ட் ஸ்பென்ஸர்* நமது காலதத்துவஞானி களில் பிரக்கியாதி பெற்றவர். இவரேதான் முதல் முதலில் உயிர்கள் பரிணமித்து வந்திருக்கவேண்டு மென்று உலகிற்கு எடுத்துக்காட்டியவர். அதன் பிறகு தான், பிரபல உயிர் நூல் ஆசிரியரான சார்லஸ் டார்வின் என்பார் இயற்கை தேர்ந்தெடுத்தலென்ற முறைப்படி, உயிர்கள் ஒன்றிலிருந்து மற்றொன்று மாறி வந்திருக்க லாமென்று நிரூபித்தார். பிரபஞ்சத்திலுள்ள சராசரப் பொருள்கள் யாவும் ஒன்றிலிருந்து மற்றொன்று பரிண மித்து வந்திருக்கவேண்டுமென பற்பல திருஷ்டாந்தங் களால் இவர் யூகமுடன் எடுத்துரைத்திருக்கின்றார். நமது சமூக வாழ்க்கையில் தோன்றியுள்ள மதங்களும், சமூக ஸ்தாபனங்களும் பரிணமித்து வந்த விதங்களைப் பற்றியும் அனேக நூல்கள் எழுதியிருக்கிறார். உலகைப் பற்றியும், பிரபஞ்சத்தைப்பற்றியும் மக்கள் கொண் டிருந்த பண்டைக்கால எண்ணங்களை மாற்றியவர்களில் இவரும் ஒருவர்.

இதுவரை, அறிவியல் துறையில் பேருதவி புரிந் துள்ள ஹக்ஸ்லி, டார்வின், ஸ்பென்ஸர் போன்ற பிரக் கியாதிபெற்ற சிந்தனைவாதிகளின் வாழ்க்கையிலிருந்து உண்மையைத் தேடும் ஆற்றல், சத்திய வாழ்வு காண எண்ணிய பேரவா எத்தனை தூரம் தங்களுடைய கல்வி மேம்பாட்டால் பெறப்பட்டது அல்லது எத்தனை தூரம் தங்களோடு உடன் பிறந்த ஆற்றலாகப் பெற்றார் களென்று பரிசீலனை செய்தோம். இதுவரை கண்ட

* பிறந்தது 1820. இறந்தது 1905.

முடிவுகளிலிருந்து கல்வி ஞானமும் சந்தர்ப்ப வாய்ப்பும் அத்துணை முக்கியத்துவமாக உண்மையை தேடும் ஆற்றலுக்கு உதவக் காணோம். இனி வேறு ஒரு பெரியாரைப் பற்றி கவனிப்போம்.

*   *   *

அவர் வில்லியம் கிங்டம் கிளிப்போர்டு* என்பவராகும். அவர் ஹக்ஸ்லி பிறந்த இருபது வருஷத்திற்குப்பிறகு 1845ம் வரு மேமீ 4வ எக்ஸீடரில் பிறந்தார். இவருடைய பிறந்த நாள் ஒற்றுமையைத் தவிர இவர் சத்திய சோதனையில் ஹக்ஸ்லியைப் போன்றே பேரார்வம் கொண்டிருந்தார். ஆனால் உண்மையற்ற விஷயங்களை அம்பலப்படுத்துவதிலும், மூடக்கொள்கைகளை நிர்மூலப்படுத்துவதிலும் இவர் அமைதியுடையவராக இருந்தார். கிளிப்போர்டு ஷெல்லியைப் போன்று பரிசுத்த பளிங்கு மனத்தினராவர். கவி ஷெல்லியைப் போலவே இவரும் முப்பத்திநான்காவது வயதிலேயே காலமாகிவிட்டார். துரதிர்ஷ்டவசமாக அவரது வாலிபப் பருவ வாழ்க்கை வரலாறு கிடையாது. இவர் காம்பிரிட்ஜ் டிரினிடி கல்லூரியில் பயின்றார். இவர் கணித சாஸ்திரத்தில் பிரக்கியாதி பெற்ற ராங்லர்† பட்டம் பெற்றிருந்தார். பின் இவர் லண்டன் யுனிவர்சிட்டி கல்லூரியில் கணித பேராசிரியராக இருந்தார். இவர் திருத்தேவாலயத்தோடு ஐக்கியப்படுவதற்காகவே முதலில் கல்லூரி வாழ்க்கையில் பிரவேசித்தார். ஆனால் இவர் வாலிபத்திலேயே பைபிளில் உண்மை காணக்

* William Kingdom Clifford. † Second Wrangler.

கிடைக்கவில்லையென்று கண்டுணர்ந்து டார்வின், ஸ்பென்ஸர் போன்றோரின் பொன்னெழுத்துக்களில் கவனஞ்செலுத்தலானார்.

மனித உற்பவம்* என்ற நூலை டார்வின் பிரசுரித்த நான்காவது வருஷத்தில், அதாவது கிளிப் போர்டின் முப்பதாவது வருஷ முடிவில் "நல்லனவும்–தீயனவும்–அதனதன் தனித்தன்மைக்கான விஞ்ஞான ஆதாரங்கள்" என்றதொரு சொற்பொழிவில் எல்லா சந்தர்ப்பங்களிலும் உண்மை பேசுவதுபற்றி அவர் வலியுறுத்திக் கூறியுள்ள விஷயங்கள் கவனிக்கற்பாலது.

"பொதுஜனங்களிடையே சில உண்மைகளை பிரபல்யப்படுத்துவது அபாயகரமானதென்று அடிக்கடி முணுமுணுக்கப்படுகிறது. அது முழுதும் அபத்தமாகும். அதோடு உண்மைகளை பொதுஜனங்களிடையே பிரபல்யப்படுத்துவது மிக்க பிரயோஜனமாகும். வளைவுகொளைவான விஷயம் எப்பொழுதும் கோணலுடையதாகவே இருக்கும்; ஏனெனில் தனிப்பட்டவர்களைவிட பெரும்பான்மையான பொதுஜனங்கள் ஏமாற்றப்படுவதற்காகவே வளைவு கொளைவுகள் ஏற்பட்டதாலேயாகும்."

"ஒரு விஷயம் உண்மையானதாக இருந்தால் அதனைபணக்காரர்களும் சரி, ஏழைகளும் சரி, ஆணும் சரி, பெண்ணும் சரி, குழந்தைகளானாலும் சரி அதனை அனைவருமே நம்பட்டும். ஒருவிஷயம் உண்மையல்ல

* The Descent of man.

வென்றால் அதனை பணக்காரன், ஏழை, ஆண், பெண், குழந்தை என்ற வித்தியாசமின்றி யாருமே நம்பவே வேண்டாம்."

"உண்மை, சத்தியம் என்கிற விஷயங்களெல்லாம் கூரைமீதிருந்து கூவவேண்டிய விஷயங்களேயொழிய, போஜனத்திற்குப்பின் பெண்களெல்லாம் அயர்ந்து போன பிற்பாடு ஒருவருக்கொருவர் கலந்து முணு முணுப்பதற்காகவல்ல."

கிளிப்போர்டு, உண்மை, முழுஉண்மையைத்தவிர வேறு எதுவுமில்லை என்ற சத்தியத்தை, எள்ளளவும் பயமின்றி, செயிண்ட் பால் உற்சாகத்தோடு தனது தாரக மந்திரத்தை எவ்வாறு கூறியுள்ளாரோ அது போலவே கூறி கதறிப் போயுள்ளார்.

டார்வின் எழுதிய மனித உற்பவம் என்ற நூலை மிக்க கவனத்தோடு கற்றுணர்ந்து, மனித பரிணமைத்தில் "தேர்வுக் குழு"வின்* அம்சத்தை உணர்ந்த முக்கியஸ்தர்களில் முன்னணியில் வைக்கவேண்டியவர் இவரேயாவர்.

* * *

மனிதன் ஸிமியன் அதாவதுமனிதனைப் போன்ற வாலில்லாக் குரங்கு இனத்திலிருந்து பரிணமித்துள்ளான் என்றசித்தாந்தத்தை இதுவரைகூறிவந்த நான்கு பரிணமவாதிகளும் ஒத்துக்கொண்டிருக்கின்றனர்.

---

* Group Selection.

உயிரோடு ஜீவிக்கிற உயரிய வாலில்லாக்குரங்கினத்தைக் கொண்டு அதனுடைய மனோ குணங்களை பரிசிலனை செய்து பார்த்தால் அது அதன் முழு வளர்ச்சிக்காலப்போக்கில், ஹக்ஸ்லி, டார்வின், ஸ்பென்ஸர், கிளிப்போர்டு ஆகியவர்களின் மனோ பக்குவ நிலைமைக்குற்றதாக வந்துவிடுமாவென நாம் கேள்விப் போட வேண்டியவர்களாகயிருக்கிறோம்.

காடுகளில் இயற்கையாக வசிக்கும் வாலில்லாக் குரங்குகளின் சமுதாயத்தைக் கவனித்துப் பார்த்து அது அனுசரிக்கும் தந்திரோபாயங்களையும், ஏமாற்று வித்தைகளையும் நிதானித்துப்பார்ப்போமானல், அதன் பேச்சு வன்மையால் (அவ்வாற்றல் இருக்குமானல்) அது உண்மைக்கு பதில் பொய்யே சொல்லும் வன்மையை நாம் கண்டு கேட்கலாம்.

பையனுக இருக்கும்பொழுது "எதனையாவது ஏமாற்ற முற்படுவது ஒரு பொய்யே யாகும்" என்று எனக்கு கற்பிக்கப்பட்டதென்கிறர் சர் ஆர்தர் கெய்த். இந்த சித்தாந்தப்படி வாலில்லாக் குரங்குகளை வன்மை மிக்க பொய்யர்களென்று கூறலாம். எனினும் நாம், வாலில்லாக்குரங்குகளிடையேயும், அதனுடைய பிறவி மனோ நிலையிலும் நல்ல அம்சங்களைக் காணக்கூடும். அவைகளிடையே ஆச்சர்யமாகிய விஷயம் முக்கிய அம்சமாகவும், அதனூடே பிறந்திருப்பதையும் உணரலாம். ஆச்சர்யப்படுவதிலிருந்துதான் 'காரியங்கள்' கிளர்ந்தெழுகின்றன. கிளர்ந்தெழும் காரியங்கள் இல்

லாது போனால் கேவலம் வாலில்லாக்குரங்கின் வாழ்வும் வெறும் மண்ணேயாகும். காரியங்கள்தான், பின் நடவடிக்கையாக மாறுகின்றன.

வாலில்லாக் குரங்குகளின் வாழ்விலகூட, ஆராய்ந்தறியும் மனோபக்குவத்திற்கான மூன்று அடிப்படை அம்சங்கள் இருந்துவருவதை நாம் காணலாம். டாக்டர் ராபர்ட் எம். எர்க்ஸ்* வாலில்லாக் குரங்குகளின் மனோநிலையைக் கண்டுணர தன் வாழ்நாளையே செலவு செய்திருக்கிறார். அவருடைய ஆராய்ச்சியின் முடிவுகள் நம்முடைய கருத்தை வலியுறுத்துவதாகும். 'காங்கோ'† என்ற பெண் கொரில்லாவின் தந்திரம், சாதுர்ய கெட்டிக்காரத்தனம், ஒருவரும் கவனியாதபோது துணிகரமாக ஏமாற்றுதல் ஆகியவற்றைக் குறித்தெல்லாம் மேற்கண்ட டாக்டர் கீழ்க்கண்ட குறிப்புகள் எழுதியுள்ளார்.

ஆச்சர்யப்படவேண்டியதென்பது 1926-ம் வருஷத்தில் காங்கோவிடம் அபூர்வமாகவும், குறைவாகவும் இருந்தது. ஆனால் அடுத்த வருஷத்தில் அந்நிலைமை கவனிக்கத்தக்க அளவுக்கு அபிவிருத்தி அடைந்ததோடு, புதிய நிலைமைகளுக்கேற்றவாறு தன்னை அமைத்துக்கொள்வதிலும் ஒரு முக்கிய பங்கை மேற்போட்டுக்கொண்டது. என்றாலும் சிம்பன்ஜியை‡ விட காங்கோ நுட்ப ஆற்றல் பெறவில்லை.

---

* Dr. Robert M. Yerks. † Congo. ‡ Chimpanzee.

காங்கோ தன்னிடையே புதிய வஸ்துவோ அல்லது புதிய நிலைமையோ ஏற்பட்டால் பல வகையில் அதைப் பார்க்க, பரிசீலிக்க, கவனஞ் செலுத்தும். ஆனல் சிம்பன்ஜியோ விடாப்பிடியாகவும், உண்மை காணவேண்டுமென்கிற துடிப்பின் ஆர்வத்தின் காரணமாகவும் காங்கோவைவிட சிறந்து நடந்து கொள்ளும்.

சாதாரணமாக 'காங்கோ' விடம் நாம் ஆச்சர்யத்தை எதிர்பார்க்கும்பொழுது ஏதோ அலட்சியமாக இருப்பது போன்று காட்டிக்கொள்ளும்.

'காங்கோ' தெளிவான மனேநிலையுடையது. இக்குண விஷேசம் ஸிமியன் அதாவது வாலில்லாக் குரங்கின் மூதாதைகள் உலகத்திற்கு புறம்பானது. டாக்டர் எர்ச்ஸ் கீழ்க்கண்டவாறு கூறுகிருர்.

"ஆச்சர்யப்படுவதென்பதிலிருந்தே ஒன்றை 'சர்வே' செய்ய, பரீக்ஷிக்க, கண்டுபிடிக்க; அதனல் முடிவில் அவ்வஸ்துக்களின் தன்மையையும், மதிப்பையும் முடிவு கட்ட; பின்னும் அதனுல் உபயோகத்திற்கு தகுந்தது மாதிரி செய்ய ஏதுவாகிறது."

இதுமாதிரியான வாலில்லாக் குரங்கினுடைய நடவடிக்கைகளிலிருந்தே நாம் ஆராய்ச்சியின் ஆரப்பத்தை கவனிக்கப் புகுகிருேம்.

டாக்டர் எர்க்ஸ் கண்டுபிடித்துள்ள வாலில்லாக் குரங்குகளின் மனேபாவ வரலாற்றுக்கும் — உயிர்

உற்பத்தி வரலாற்றிற்கும் மத்தியில் எத்தனையோ சுவடுகள்* காணப்படாமலிருக்கின்றன. என்றாலும் மனிதனுடைய உண்மைநாடும் மூலாதார குணவிசேஷம் வாலில்லாக் குரங்கினிடமும் காணப்படுவதை நாம் பார்க்கத் தவறமாட்டோம்.

பிரக்கியாதிவாய்ந்த சிந்தனாவாதிகளின் உண்மைநாடும் குணவிசேஷங்கள் ஸிமியன் ராசியோடு ஒத்திடக் கூடியதென இதுவரை கண்ட முடிவானதொரு விஷயமாகும்.

* * *

சிந்தனாவாதிகள் அல்லது பரிணாமவாதிகள் ஆராய்ந்து தெரிந்து சொல்லும் உண்மையை மக்கள் பலர் சாதாரணமாக ஒத்துக்கொள்ள மறுப்பதற்குள்ள காரணமென்ன? அது மனித இயற்கைக்குள்ள ஒரு சில தவறானகோட்பாடுகளேயாகும். இதை கவனமாக ஆராய்வோம்.

படித்த அறிவாளிகள், மேதைகள் பலர் டார்வினின் மனித உற்பத்தி சித்தாந்தத்தை மனமில்லாமல் அறைகுறையாகவே ஒத்துக்கொள்கின்றனர். டார்வின் சித்தாந்தத்தை முழுதும் அப்படியே ஒத்துக்கொள்கிறவர்கள் கூட, மனிதன் கேவலம் மிருகங்களினின்று தோன்றினான் என்று சொல்வதைவிட மனிதன் தேவர்களிடமிருந்து தேவ அம்சமாக தோன்றினான் என்று ஆராய்ச்சி மூலம் நிரூபிக்கப்பட்டு, டார்வின் சித்தாந்தம்

---

* Intermediate Stages.

பொய்யென்று நிரூபிக்கப்பட்டுவிட்டால், அதற்காக அளவற்ற மகிழ்ச்சி கொள்வார்கள். இது மாதிரி மனித சுபாவத்தின் தவரான கருத்துக்குக் காரணம் என்ன?

மனித இயற்கையிலும்சரி, மிருக இயற்கையிலும் சரி, இடமும் அந்தஸ்தும் மிக மிக நீண்டகாலமாக உடன் பிறந்த ஆசையாக இருந்திருக்கிறது. எல்லாக் காலங்களிலும் எல்லா மக்களுமே, மனிதன் மிருக நிலையோடு ஒத்திட்டுப்பேச ஒருப்பட்டது கிடையாது. அதைக் கண்டனமாகவெறுத்து வந்திருக்கிறான். சாதாரண மனிதன், காட்டுமிராண்டியானாலும் சரி, நாகரிக மானவனானாலும் சரி, தன்னுடைய அந்தஸ்து கௌரவிக்கப்படவேண்டுமெனவே விரும்புகிறான்.

நாமெல்லாம் ஹிருதய பூர்வமாக காட்டுமிராண்டிகளே.*அநாகரிக தன்மையே நம்முடைய பரிணாமவாத பாரம்பர்ய அம்சமாகும். அப்படியிருந்தும், நாமெல்லாம், சாதாரணமாக நம்முடைய சகாக்களின் கண்ணோட்டத்தில் உயர்ந்தவர்களாகயிருக்க விழைகிறோமே தவிர - தாழ்ந்தவர்களாகக் காண ஒருப்படுவதில்லை.

மனித பரிணாமத்தில், மனித இயற்கை குணங்களின் சில அம்சங்கள் வளர்ந்து மனிதன் தான் வாழும் மெய்உலகத்தை சரியாகக் காணத்தவறிவிட்டான். மிகச் சிறந்த பரிணாமவாதிகள் அதாவது சிந்தனைவாதிகளான ஹக்ஸ்லி, டார்வின், ஸ்பென்ஸர் போன்றோர்கள்கூட தங்களுடைய பால்ய வயதில் எவ்வாறு'பகல்கனவுகளை'

---

* Snob.

யும், 'ஆகாயக்கோட்டைகளை'யும் கட்டும் மனோசார்புடையவர்களாக இருந்தார்களென்று கவனித்திருக்கிறோம். இதுபோலவேதான் நாம் நம்முடைய பால்ய வயதில் மெய் உலகத்தை உணராது, கண்ணை மூடியவர்களைப்போல் நமது எண்ணமும், ஆசையும் போகிறப் போக்கில் கனவுகளையும் கோட்டைகளையும் கட்டி வந்திருக்கிறோம். பொதுவாக மனிதன் பிறந்த பத்து வருஷம் வரை சிறுபிள்ளைத் தனமாகவும் — குரங்கு மனித மூதாதைத்தன்மை கொண்டதாகவுமே இருந்து வருவதை கவனித்திருக்கிறோம்.

பொதுவாக உண்மையைவிட கட்டுக்கதையை பால்யர்கள் விரும்புகிறார்கள். ஒரு யுவனையோ அல்லது யுவதியையோ காதல் பற்றுமானால் "யதார்த்தம்" என்பது எங்கோ பறந்துவிடுகிறது அவர்களுக்கு ஒரு கால அளவுக்கு இந்த உலகமும் 'சுவர்க்க' உலகமாக மாறி விடுகிறது. எதற்காக நாம் காதலர்கள் மனதை இங்கு இழுக்கிறோமென்றால் — பொதுவாக அவர்கள் இருக்கிற உண்மையை உணராமல், எப்படி இருக்க வேண்டுமென்றோ அல்லது எப்படி ஊகிக்கிறார்களோ அப்படி உலகம் இருப்பதாக உணர்கிறார்கள் என்று எடுத்துக் காட்டுவதற்குத்தான். இதற்குக்காரணம் மூளையும்—சரீரமும் சேர்ந்து செய்யும் இயற்கை சேர்க்கைக் கூட்டுறவு என்று உணரவேண்டும். பொதுவாகக் 'காதலர்'கள் உண்மைக்கும் யதார்த்தத்திற்கும் புறம்பாக இருக்கிறார்கள்.

மனிதனுக்குள்ள விசேஷ ஆற்றலால் பகுத்தறியவும் விஷயங்களை தாராதாப்படுத்தவும் சக்தி பெற்றிருக்

கிறான். மற்றும், மனிதனிடத்தில், வாலில்லாக்குரங்கின் மூதாதையரிடமிருந்து பெற்ற ஜீவனைக்காக்கும் அணுக்கள் இருந்து வருவதால் அது அவனை ஜீவிதத்தோடு வாழ வழிவகை செய்கிறது. இந்த ஜீவனைக் காக்கும் அணுமயத்தாலே ஆசாபாசமும், பசியும், கோப தாபங்களும், விருப்பு வெருப்புகளும் ஏற்படுகின்றன. இவைகள்தான் மனிதனுடைய எண்ணத்தை நிர்த்தாரணப்படுத்தவும் உதவுகிறது.

சாதாரண மனிதனிடத்தில் பகுத்தறியும் குணமானது அவனுடைய ஆசாபாசங்களுக்குற்ற வகையில் ஊழியனாக இருக்கிறதே தவிர — பகுத்தறியும் தன்மை ஆசாபாசங்களுக்கு மேம்பட்ட எஜமானனாக இல்லை. பொதுவாக பகுத்தறியும் தன்மை மேற்கண்ட குணங்களுக்கு அனுசரணையாக இருந்து அந்த அனு குணங்கள் நிறைவேற வழி வகைகளை வகுக்க அது துணை செய்கிறது. சுருங்கச்சொல்லவேண்டுமானால் மனிதனுடைய மனோ அமைப்பானது, விஷயங்களை அது எப்படி இருக்கிறதோ அப்படிப் பார்க்கத் துணை செய்யாது; நாம் எப்படிப் பார்க்கிறோமோ அப்படிப் பார்க்கத் தூண்டுகிறது.

இயற்கை மனிதன் ஒரு யதார்த்தவாதியல்ல, ஒரு தத்துவார்த்தவாதியே. சராசரி மனிதன் தான் கொண்டுள்ள உற்சாகத்திற்குரியதான விஷயங்களுக்குப் புறம்பாக உண்மையைக் கேட்க விரும்புவதில்லை. மனித இயற்கையில் உண்மையைக் காண இயற்கை ஆர்வம் இருக்கிறதென்று சொல்வது சரியல்ல.

உயிர்மீது மனிதனுக்குள்ள பிடிப்பை ஒரு தூண்டுதலென்று சொல்ல வேண்டுமே தவிர அறிவுத் திறனல் அல்ல. இது எந்தவகையிலும் ஒரு புது சித்தாந்தமல்ல. ஸ்டோயிக் எபிக்டீடஸ்*என்ற பெரியார் "மனிதன், உயிர் வாழ்வதற்கே காரணம் தவறான கோட்பாடே"†என்கிறார். ஹ்யூம் என்ற தத்துவஞானியும் "மனித உயிர் ஏதோ முக்கியத்துவம் கொண்டது என நாம் நம்பும்படி இயற்கையின் தந்திரம் நம்மை சந்துஷ்டிகரமாக ஏமாற்றுகிறது" என்கிறார். மற்றோர் இடத்தில் அதே ஆசிரியர் மனித இயற்கையின் இயற்கை வேறுபாட்டை "நாம் ஏதோ தத்துவ சாஸ்திரத்தால் சில கொள்கைகள் மீது நம்பிக்கை உறுதியும், முடிவானதுமானது என்று நம்புகிறோம். ஆனல் உண்மையில் விருப்பப்படுவதென்பதோ, வெறுக்கப்படுவதென்பதோ, அழகுள்ளதென்பதோ, அழகற்றதென்பதோ ஆகியவையெல்லாம் மனித மனோதன்மையையும், அதன் மீதுள்ள அவன் பற்றுதலையும் பொருத்ததே" என்று குறிப்பிடுகிறார்.

ஹக்ஸ்லியோ அன்றி ஸ்பென்ஸரோ மனிதனை இயற்கையாக ஒரு அறிவுள்ள மிருகமாகக் கூறவில்லை. ஹக்ஸ்லி, தன் சிநேகிதருக்கு எழுதியுள்ள கடிதத்தில் "மனிதன் ஒரு அறிவுள்ள மிருகமே அல்ல. குறிப்பாக அவனுடைய தாய் தந்தை வழியில் கூட இல்லை என்று சொல்லிவிடலாம்" என்கிறார். ஸ்பென்ஸர் 1881-ஆமல் எழுதும்பொழுது "ஒரு எல்லை அளவில்தான் மனிதன் அறிவுள்ளவனக இருப்பதாக புலனாகிறது" என்கிறார்.

---

* Stoic Epictetus A. D. 60-140. † Prejudice.

II

நாம் என்னதான் நாகரிக வாழ்வு வாழக் கற்றுக் கொண்டிருந்தாலும், நம்முடைய பூர்வ மனித மிருக மூதாதையர்களுடைய நடத்தையை, நம்மை அறியாமலே சில சந்தர்ப்பங்களில் நாம் காட்டிக்கொள்ள நேர்ந்துவிடுகிறது. இதற்கு உதாரணமாக கீழ்க்கண்ட சம்பவங்களை சிந்தித்துப் பார்க்கவும்.

நீங்கள் ஒரு மோட்டாரில் பிரயாணம் செய்வதாய் வைத்துக்கொள்ளுங்கள், காரை ஓட்டுகிற டிரைவர் விஷயம் தெரியாத ஒரு மூடன் என்றும் வைத்துக் கொள்ளுங்கள். அப்பேர்ப்பட்ட டிரைவர் தனக்குமுன் போகிற ஒருகாரை மீறி ஓட்டவேண்டுமென்று சுருதி வேகமாக ஓட்டுவதாகவும் வைத்துக்கொள்ளுங்கள். போகிற வழியும் சந்துபொந்தாகவும் குறுகலாகவும் இருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். அதோடு எதிரில் ஒரு காரும் வேகமாக வருகிறது என்றால் இந்த நிலையில் தலைதெரிக்க ஓடும் காரில் உட்கார்ந்திருக்கும் நீங்கள் என்ன செய்வீர்கள் தெரியுமா? நீங்கள் டிரைவர்மீது சீறி விழுவதோடு உங்கள் கைக்குக் கிட்டிய கதவுப் பிடியையோ 'டேஷ் போர்டை'யோ அல்லது நீங்கள் உட்கார்ந்திருக்கிற இடத்திலுள்ள எதாவதொரு பிடிப்பையோ அல்லது உங்கள் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் நண்பரின் கையையோ அல்லது இன்னும்

மோசமாக 'ஸ்டீயரிங்' சக்கரத்தையோ பிடித்துக்கொள்வீர்கள். உங்கள் கார் டிரைவர் எப்படியோ வெற்றிகரமாக இந்த அபாயங்களிலிருந்தெல்லாம் மீறி காரை ஓட்டிவிட்டாலும் உங்களுடைய பிடிப்பிலிருந்து உங்களுடைய கையை எடுத்துவிட மாட்டீர்கள். இவைகளுக்கெல்லாம் காரணம் என்ன?

பொதுவாக உங்களுடைய பிடிப்பு கொஞ்சமும் பிரயோஜனம் இல்லை என்பதை நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள். ஆனால் இது உங்களுக்கு பிரயோஜனமில்லாவிட்டாலும் நம்முடைய முன்னோர்களான குரங்கு மனித மூதாதைகளுக்கு பயன்பட்டே இருந்திருக்கிறது.

மரத்தில் தாவித்திரிகின்ற குரங்குகளுக்கு பயம் ஏற்பட்டபொழுது எதையாவது ஒன்றை பற்றிக்கொள்ளவேண்டும் என்ற ஒரு பலமான தூண்டுதல் இருந்திராவிட்டால் அதனுடைய வாழ்வெல்லாம் என்னவாகியிருக்கும். சர்வ சாதாரணமாக அவைகளெல்லாம் பயத்தின் காரணமாக கீழே விழுந்து செத்து மடிந்து இருக்கும். அதுபோலவே நம்முடைய மூதாதையர்களுடைய கதியும் க்ஷீணித்து போயிருக்குமன்றோ!

இனி வேறொரு உதாரணத்திற்குச் செல்வோம். உங்கள் ஊருக்கு வெகு தூரத்திற்கு அப்பால் ஒரு அடர்ந்த காடு இருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். அந்த காட்டில் நடு நிசியில் நீங்கள் இருந்தால் என்ன நினைப்பீர்கள்? உங்களுக்கு இருட்டைப்பற்றிய பயம்

இல்லை என்று வைத்துக்கொண்டாலும் உங்களுக்கு தனியே காட்டில் நடந்துசெல்ல ஒருபயம் இருக்கும். அதோடு நீங்கள் மனிதர்கள் வாழும் இடத்திற்கு திரும்பி வரத்தான் நினைப்பீர்கள். இந்த தூண்டுதல்கள் நம்முடைய மிருக மனித மூதாதையர்களுக்கு எவ்வளவு பேருதவியாக இருந்திருக்கும்.

ஆதிகாலத்தில் நம் ஆதி மனிதன் முன்சொன்னவாறு தனியே காட்டில் திரிய நேரிட்டால், மாமிச பக்ஷினிகள் அவனைக் கொல்ல எத்தனிக்கும். எதிரி தனி மனிதனாக இல்லாமல் கூட்டமாக இருக்க ஏற்பட்டு விட்டால் எதிர்ப்பு இருக்காது. மனிதன் தனியாக காட்டில் போகும் போதுதான் திரும்பிவர எத்தனிப்பான். மற்றொருவனுடன் இருந்தால் அந்த எண்ணம் அவ்வளவாக இருக்காது.

நம் ஆதி மனிதனுக்கு மேற்சொன்ன ஆபத்து ஏற்பட்டபோது அவனுடைய மூதாதையர்களான குரங்குமனிதர்களைப்போல மரங்களிலேறி தாவித்தாவி தப்பித்துக் கொள்ள ஆற்றலில்லாது போய்விட்டது. அதோடு தன்கைக்கு அகப்படும் மிருகத்தை நாசம் செய்வதற்கு அவனுடைய மூதாதையர்களைப்போல கோரப்பற்களும், இதரசாதனங்களும் காலப்போக்கில் மறைந்திருந்தன. இதனாலெல்லாம் சௌகரியமாக அவன் காட்டிலிருந்து திரும்பி விடுவதே விவேகமென்று உணர்ந்தான். அதனாலே தான் அவனுக்கு காட்டிலிருந்து திரும்பவேண்டும் என்கிற தூண்டுதலும் ஏற்பட்டு விடுகிறது.

இன்னும் வேறு சில உதாரணங்களையும் கவனிப் போம் காடுகளில் வேட்டைக்கு செல்பவர்கள் இரவு நேரத்தில் மரத்தின் மீது உட்கார்ந்திருக்க விருப்பப் படுகிற மாதிரி தரையிலிருக்க விரும்பமாட்டார்கள். தரையில் ஆபத்தில்லாத பிரதேசத்தில் கூட மேற் கண்ட உணர்ச்சிகள் வேட்டைக்காரர்களுக்கு இருந்து வருகிறது.

நீங்கள் ஒரு காட்டிலிருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் நடந்து செல்லும் பொழுதே உங்களுடைய காலடி சப்தத்தை கேட்டுக் கூட திரும்பிப் பார்ப்பீர்கள். உங்களுடைய நடைகூட சந்தடி செய்யாததாக இருக்கும். அப்பொழுது ஏதா வது ஒரு சப்தம் ஏற்பட்டுவிட்டாலோ நீங்கள் அப் படியே திரும்பி நின்று விடுவீர்கள். உங்களுக்கு நடந்து செல்ல விருப்பம் இருக்காது. அப்பொழுது ஏதாவது ஒரு மரத்தின் மீது சாய்ந்து கொள்வீர்கள். நீங்கள் மரத்தின் மீது ஏறிவிட்டாலோ அது உங்கள் மனதிற்கு நிம்மதியை கொடுத்துவிடும். ஒரு சமயம் நீங்கள் மரத்தை விட்டு இறங்கினாலும் கூட நீங்கள் திக்கு திசை தெரியாத அந்த காட்டிலிருந்து போக வழி தெரியாதவர்களாக இருந்தால் நீங்கள் கொஞ்சம் கூட நடக்கப் பிரியப்படமாட்டீர்கள். நீங்கள் நம் மூதாதையர் களைப் போலவே மரத்தின் மீது ஏறி உட்கார்ந்து கொள்ள ஆனந்தம் கொள்வீர்கள். தரையின் மீது நின்று உலாவுவதைவிட மரத்தின் மீது உட்கார்ந்து கொள்வது தனித்த விசேஷமாயிருக்கும்.

நாம் நீண்டகால நடவடிக்கைகளால் தரையில் வாழ்பவர்களாக இருக்கிறோம். ஆனால் நம்மை அறியாத சந்தர்ப்பங்களில் நமக்கு ஏற்படுகிற தூண்டுதல்களோ மரத்தில் தாவி வாழும் மூதாதையர்களுடையதாகும். குழந்தைகளுக்கு ஏற்படும் தூண்டுதல்களும் முன் சொன்ன மரத்தில் தாவி வாழும் மூதாதையர்களுடைய தேயாகும்.

மற்றும் மனிதனுக்கு பதினன்கு வயது வரை மூக்கில் நாற்றமும் வாசனையும் வெகு நன்ருகத் தெரிகிறதென்றும் பின்பு மெல்ல அத்திறன் குறைகிறதென்றும் விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிருர்கள் என்று சமீபத்தில் பத்திரிகைகளில்* வெளியான செய்தியை நாம் படித்திருக்கிறோம்.

மேற்கண்ட உதாரணங்களிலிருந்து மனிதனுடைய மூளையையும் வாலில்லாக் குரங்கு மனிதனுடைய மூளையையும் கொஞ்சம் கவனித்து பார்க்கலாம். மேற்சொன்ன சம்பவங்களிலிருந்து மட்டும் மனிதனுடைய மூளையானது, வாலில்லாக் குரங்கு மனிதனுடைய மூளையைவிட விசேஷமானதென்று சொல்லிவிட முடியாது. ஆனால் நாம் பெற்றுள்ள கெட்டிக்காரத்தனமெல்லாம் பேச்சாலும், எழுத்தாலும் நம்முடைய முன்னேர்கள் தாங்கள் கொண்ட அனுபவங்களினுலெல்லாம் ஒன்று திரட்டி நமக்கு கொடுத்திருப்பதனுலேயே என்று உணர வேண்டும்.

---

* 12–3–50.

நம்முடைய சொந்த மூளைகளுக்கு, நம்முடைய முன்னோர்களது எழுத்தும், பேச்சும் அளவற்று உதவியாகியிருக்கிறது. அவர்களுடைய ஞானமெல்லாம் நமக்கு பயன்பட்டிருக்கிறது. பல லட்சக்கணக்கான அனுபவங்களும் நமக்கு உதவியளிக்கிறது. ஆனால் இந்த வாய்ப்பெல்லாம் நமது முன்னோர்களான குரங்கு மனிதர்களுக்குப் பிரயோஜனப்படவில்லை. இப்பொழுதுங்கூட சிம்பன்ஜி, உராங்குட்டான், போன்றவைகளுக்கு பேச்சு வன்மையும், மனோவன்மையும்* இருந்துங்கூட, நமக்குள்ள எழுத்தாலும் பேச்சு வன்மையாலும் நாம் பெற்றுள்ள அனுபவங்கள் அவைகளுக்குப் பயன்படவில்லை.

மனிதன் தோன்றி லட்சபோலட்ச வருஷங்களாகின்றன. எனினும், எவ்வளவோ புதிய புதியனவும் கண்டு பிடிக்கப்பட்டிருந்தும், எவ்வளவோ ஞானங்களை காலம் நமக்கு அள்ளிக்கொடுத்திருந்தும், மனிதனுடைய மூளையானது பொதுவாக கவனிக்குமிடத்து, அவ்வளவாக அபிவிருத்தி அடையவில்லை என்றே நாம் திட்டமாக சொல்லிவிடலாம். நமக்கு அறிவு விசாலப்பட்டிருக்கிறது என்று நாம் சொல்லிக்கொள்ளலாமே தவிர நம்முடைய மூளையினுடைய பரிணாமமானது கொஞ்சமும் அபிவிருத்தியடையவில்லை என்பது துணிபு.

நாம் தெளிவாக பேசும் வன்மை பெற்றிருப்பதனால் தான் நாம் மற்ற விலங்குகளிலிருந்து வேறுபட்டிருக்கிறோம்.

---

* Mental Powers.

உதாரணமாக நாம் பேசும் ஆற்றல் பெறுவதற்கு முன், குழந்தையாக இருக்கும்போது மனித சஞ்சார மற்ற ஒரு தீவில் நம்மை விட்டு விடுவதாக வைத்துக் கொள்ளுங்கள்; அங்கு நாம் சாகாமல் இருப்பதற்கு 'பாலும், தேனும்' வழிந்து ஓடுவதாக வைத்துக்கொள் ளுங்கள். அப்பேற்பட்ட இடத்தில் வாழ்ந்த ஒரு மனி தன் அவனுடைய கடைசி காலத்தில் எவ்வளவு கல்வி ஞானத்தை பெற்றிருப்பான் என்று நீங்கள் கருதுகிறீர் கள்? சாதாரணமாக அவனுக்கு ஏதாவது ஒரு எழு வஸ்துக்களில் ஒன்றை, ஒன்று தாரதரப்படுத்தித் தெரிந்து கொள்வதற்கு அவனுக்கு ஆற்றல் இருக் காது. அல்லது இரண்டையும் இரண்டையும் கூட்டினுல் நான்கு என்கிற சாதாரண ஆரம்ப கணித ஞானம் கூட அவனுக்கு ஏற்பட்டுவிடாது. இதிலிருந்து பேச்சும் எழுத்தும் நமக்கு எல்லையற்ற ஞானத்தை கொடுத் திருக்கிறது என்று சொல்லி விடலாம். காலம் ஆக ஆக நமக்கு வாய்ப்பும் அதிகம் கிடைத்திருக்கிறது. உயிர் நூல் பேராசிரியரான சார்லஸ் டார்வின், எவ்வளவோ அரும்பாடுபட்டு நமக்கு அவரின் சித்தாந்தத்தை சற்றுக் கொடுத்திருந்தும், அவர் நம்மைவிட எவ் வளவோ மேதையாக இருந்தும், நமக்கு இன்று கிடைத்துள்ள வாய்ப்பால் நமக்கு பரிணமவாத ஞானம் சார்லஸ் டார்வினுக்கு தெரிந்ததை விட அதிகம் தெரிந் திருக்கிறதென்று சொல்லலாம்.

பேச்சு வன்மை நமக்கு மட்டும் இருப்பதாகக் கொள்ள வேண்டாம். பேச்சு என்றுல் என்ன? கிப்ப

னுக்கும், சிம்பன்ஜிக்கும் பாஷா ஞானம் இருக்கிறது. அவைகள் பேசும் சப்தத்திற்கு உச்சரிப்பும் அர்த்தமும் இருக்கிறது. ஆனால் இவைகளெல்லாம் ஒருவித எழுச்சியை * காட்டும் தன்மையைத் தவிர வேறல்ல. "அளவற்ற மகிழ்ச்சி அடைகிறேன்" "நான் உன்மீது பிரியப்படுகிறேன்" "உபத்திரவமாக இருக்கிறது". "விரோதம்" ஆகிய வார்த்தைகளை பொருள்படும்படியாக சிம்பன்ஜி பேசுகிறது. ஆனால் எந்த வஸ்துவுக்கும் அது பெயர் வைத்துக் கொள்ளவில்லை. அதற்கு வாழைப்பழத்திற்கோ, மாம்பழத்திற்கோ, தண்ணீருக்கோ, வெண்ணீருக்கோ பெயர் கிடையாது. நாம் பெற்றுள்ள பேச்சுவன்மையானது நம்துமிருக மனித மூதாதையர்களுக்கு முன்பே குறிப்பான சப்தங்களின் மூலமாக குறிப்பட்ட வஸ்துக்களுக்கு நாம் பெயரைக் கொடுத்துக்கொண்டதின் விளைவாகும். இந்த காட்டுமிராண்டித்தனமான பேச்சுப் பழக்கத்திலிருந்துதான் நாம் வாழ்க்கைப் போராட்டத்தையும் நடத்த ஆரம்பித்தோம்.

நாம் பெற்றுள்ள பேச்சு வன்மையின் வாய்ப்பு ஒருபுரம் இருக்க, நமக்கும் வாலில்லாக் குரங்கினுடைய மனோயியல்பிற்கும் குறிப்பிடத்தகுந்த அம்சம் ஏதேனும் இருக்கிறதா என்று கவனிப்போம்.

ஒரு மிருகத்தினுடைய மனதில் என்னென்ன ஊசலாடிக் கொண்டிருக்கிறதென்று நம்மால் சுலபமாக

---

* Emotional States.

சொல்லமுடியாது. சாதாரணமாக நாம் ஒரு மாடு அசை போடுவதை பார்த்து இருக்கிறோம்; அது அப்பொழுது எதைப்பற்றியாவது சிந்தித்துக் கொண்டிருக்கிறதா? அல்லது சிந்திக்காமலேயே இருக்கிறதா? அது அன்றைய நடவடிக்கைகளைப்பற்றி ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கிறதா? அல்லது வருங்காலத்தைப்பற்றி கவலைப்படுகிறதா? அல்லது நாம் அரைத் தூக்கத்திலிருக்கும் பொழுது நம்முடைய மனதில் எதுவும் புகாததுமாதிரி அப்படி ஏதாவது 'களிமண்'ணால் மூளை செய்யப்பட்டிருக்கிறதா? இதுமாதிரி கேள்விகளெல்லாம் அபத்தமானவைகளல்ல; ஏனெனில் மனிதனுக்கு மட்டும் பிரக்ஞை* என்று ஒன்று இல்லாவிட்டால் அவன் தூங்கிக் கொண்டே எவ்வாறு நடந்து செல்வான்?

இது சம்மந்தமாக விலங்குகளை பரிசீலனை செய்துள்ள ஆராய்ச்சியாளர்கள் சில ருசிகர விபரங்களை நமக்குத் தருகிறார்கள்.

ஒரு சிலர் நாய்களுடைய நன்றியறிதலான தன்மையைப்பற்றி சொல்லி வருவதைக் கேட்டிருக்கிறோம். ஆனால் நாயினுடைய மனோநிலையை உணராதவர்கள் அதன்மீது கொண்ட மோகத்தாலும், அன்பாலும் சொல்லுகிற விஷயங்களையெல்லாம் நாம் ஒதுக்கித்தள்ளி விடவேண்டும். இதனால் நாயினுடைய அறிவை நாம் கீழ்ப்படுத்திச் சொல்லுகிறோம் என்று கருத வேண்

* Consciousness.

டாம். அது நமக்கு புரிந்துதான் இருக்கிறது. அது தன் எஜமானின் தொனியையும், வேற்றானின் தொனியையும் புரிந்து கொள்ளத்தான் செய்கிறது.

பெர்லின் சர்வகலாசாலையை சேர்ந்த ஒரு போராசிரியர்* வாலில்லாக் குரங்கின் மனோபாவங்களை அறிந்து ஒருபுத்தகம் எழுதியுள்ளார். இவர் விஷயங்களை பாரபட்சமில்லாமல் பரிசீலனை செய்து பார்த்திருக்கிறார். அவர் அதனுடைய திறமையை மனிதனைப்போல் நடக்கிற விஷயத்தில் பரிசீலனை செய்து பார்க்கவில்லை. அல்லது சிக்கலான சர்க்கஸ் காரியங்கள் செய்வதில் ஈடுபடுத்திப் பார்க்கவில்லை. ஆனால் அவர்செய்த பரிசீலனை வகையை கவனிப்போம்.

ஒரு விலங்கு ஒரு கூண்டில் அடைக்கப்பட்டிருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். அது தப்பி வெளியேற வேண்டுமானால் அது கூண்டுக்குள்ளேயேயுள்ள ஒரு குறிப்பிட்ட பொத்தானை அழுத்தினால் அதனுடைய கதவு தானாகவே திறந்து கொள்ளும் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்பேர்ப்பட்ட கூண்டில் பல பொத்தான்களும், வேண்டுமென்றே வைக்கப்பட்டிருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். இப்பேர்ப்பட்ட நிலையில் இந்த விலங்கை வெளியேறச்செய்ய பரீக்ஷை செய்து பார்த்ததில் அவ் விலங்கானது செய்யப்பட்டிருக்கிற தந்திரத்தை உணர்ந்துகொள்ளுகிறதே தவிர அந்த பொத்தானிலுள்ள † நுட்பத்தை அதனால்

---

* Prof. Koehler. † Mechanism.

புரிந்துகொள்ள முடியவில்லை. இதனால் அது பூராவும் அறிவற்றிருக்கிறது என்று சொல்லிவிட முடியாது.

ஒரு சிம்பன்ஜி குரங்கு ஒரு கூண்டில் அடைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு பசியும் இருக்கிறது. கூண்டிற்கு வெளியே கயிற்றில் கட்டப்பட்ட ஒரு வாழைப் பழம் எட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அப்பொழுது பசியுள்ள சிம்பன்ஜி கயிற்றைப் பிடித்து இழுத்து வாழைப்பழத்தை சாப்பிடுகிறது. இதை எல்லா சிம்பன்ஜிகளும் சுலபமாக செய்கிறது. ஆனால் நாய்களோ இது மாதிரியான நிலைமையில் சுலபமாக தன்னுடைய பற்களால் கயிற்றை இழுத்து வாழைப்பழத்தை எடுத்துச் சாப்பிடலாம் என்றாலும் அது அவ்விதம் செய்யாமல் அதிக திக்கு முக்கலாடிவிடுகிறது. அது தன்னுடைய நிலைமையை சமாளித்துக்கொள்ள போதிய அறிவற்றதாக இருக்கிறது.

கூண்டிற்கு வெளியே ஒரு வாழைப்பழமும் கூண்டிற்குள்ளே ஒரு கம்பும் இருந்தால் சிம்பன்ஜியானது அந்த வாழைப்பழத்தை எடுக்கச் செய்யும் முயற்சியானது அந்த கம்பு வைக்கப்பட்டிருக்கும் இடத்தைப் பொருத்ததாக ஆகிறது. வாழைப்பழமும் கம்பும் அதனுடைய கண்ணுக்கு நேரே தென்பட்டு அந்த வாழைப்பழத்தை எடுத்து விடலாம் என்றால் அந்த கம்பை உடனே உபயோகித்து வாழைப்பழத்தை எடுத்துக் கொள்ளுகிறது. அப்படியில்லாமல் வாழைப் பழமும் கம்பும் வெவ்வேறு திசைகளிலிருந்தால் அந்த

கம்பை எடுத்து உபயோகித்து அந்த வாழைப்பழத்தை எடுக்க மிக அபூர்வமாகவே முயற்சிக்கிறது.

இதுமாதிரியான சந்தர்ப்பங்களில் சிம்பன்ஜி, நிலைமையை நன்றாக உணர்ந்து கொள்ளுகிறது. அது ஏதோ, குருட்டுத்தனமாக சந்தர்ப்ப வசமாக நடந்து கொள்ளவில்லை. ஆனால் வாலில்லாக் குரங்கோ ஆரம்பத்தில் முட்டாள்தனமாகவே நடந்து கொள்ளுகிறது. ஆனால் நிலைமையை அது புரிந்து கொள்ள ஆரம்பித்து விட்டால் அதனுடைய நடவடிக்கையானது முன்போல தெளிவில்லாமலும், குருட்டாம்போக்கிலும் இல்லாமலிருக்கிறது. இப்பொழுது அந்த வாலில்லாக் குரங்கு, சுலபமாகவும் தன்னுடைய உடம்பை அதிகமாக வருத்திக்கொள்ளாமலும், தெளிவாகவும் காரியங்களைச் செய்கிறது. இதிலிருந்து நாம் உணர்கிறது என்னவென்றால் அது நிலைமையை எவ்வளவு தூரம் மனதால் கிரகித்துக்கொள்ளுகிறதோ அவ்வளவு தூரம் அது வெற்றிகரமாக நடந்து கொள்ளுகிறதே தவிர, அதனுடைய வெற்றிக்குக் காரணமான உடலை வருத்திக்கொள்ளும் முறையையொட்டி அது அப்படியே சர்க்கஸ் வேலையைப்போல் பின்பற்றுவதில்லை என்பதேயாகும். சிம்பன்ஜிக்கு ஒருகாரியத்தை சுலபமாக்கிக்கொள்ள ஆற்றலிருந்தாலும் தனக்கு இடையூறாக இருக்கிற ஒரு காரியத்தை அது தவிர்த்துக் கொள்ளுகிறதில்லை. உதாரணமாக கூண்டில் அடைக்கப்பட்ட சிம்பன்ஜிக்கு வெளியில் இருக்கிற தன்னுடைய உணவுப் பொருளை எடுப்பதற்கு கூண்டுக்குள்ளேயே

ஒரு நாற்காலி இடையூருக இருக்குமாஞல், அந்த இடையூரை நீக்கிக்கொள்ள அதற்குத் தோன்று வதில்லே. ஆனல் நீண்ட பிரயாசைக்குப்பின் விவேக முள்ள சிம்பன்ஜிகள் விஷயத்தை புரிந்து கொள்ளு கின்றன.

இதுமாதிரியெல்லாம் பரிசீலனே செய்து,முடிவாக முன் சொன்ன பெர்லின் சர்வகலாசாலேப் பேராசிரியர் மனிதனுடைய அறிவுக்கு சமீபமாக சிம்பன்ஜி யினுடைய அறிவானது மற்ற கீழ்தர குரங்கு வர்க்கத் தினுடைய அறிவை விட நம்மோடு நெருங்கி வரு வதாகக் கூறுகிருர்.

நாம் மிருகங்களுடைய எண்ணங்களின் எழுச்சி யைப்பற்றி இப்போது பரிசீலனே செய்யவில்லே. இது பற்றியெல்லாம் டார்வின் அழகாக ஆராய்ந்திருக்கிருர். பொதுவாக நாம் எப்படி நம்முடைய எண்ணங்களே பிறரிடம் வெளிப்படுத்துகிருேமோ அது போலவே சிம்பன்ஜியும் நடந்து கொள்ளுகிறது. நாம் சிந்திக்கும் பொழுது தலேயை சொரிந்து கொள்வதைப் போல அது தலேயை சொரிந்து கொள்ளவும், நாம் சிநேகிதர்களேக்காணும்பொழுது கைகளே பிசைவதைப் போல் அது கைகளால் பிசைவதையும் மற்றும் கைகளால் ஜாடை மாடை காட்டுவதையும் அது செய்துவருகிறது.

இந்த விஷயங்களே யெல்லாம் படித்து உணர்கிற நீங்கள், ஒரு சமயம் ஒரு கூண்டில் சிம்பன்ஜியை

பார்க்க நேரிட்டால் அதன்மீது முன்மாதிரி ஒரு வெறுப்பு விளையாட்டு உணர்ச்சியோடு பார்க்க மாட்டீர்களல்லவா? ஆம். நம்மைப்போன்ற ஒரு மனிதன் ஒரு கூண்டில்நிர்வாணமாக அடைக்கப்பட்டிருந்தால் எப்படி அனுதாபத்தோடு பார்ப்பீர்களோ அதுமாதிரி ஒரு அனுதாப உணர்ச்சியோடுதான் பார்ப்பீர்கள்.

இதுவரை மனிதனுக்கும் வாலில்லா குரங்கு மனிதனுக்குமுள்ள உறவுபற்றிய மாறுபாடுகளைக் கவனித்தோம். இனி மனிதனுடைய மனோதன்மையைப்பற்றி கொஞ்சம் ஆராய்வோம்

ஒருவர் உங்களுடைய கையில் சூட்டுக்கோலால் சுட ஆரம்பிக்க எத்தனித்தால் அச் செய்தியானது உங்களுடைய*நரம்புகளின் மூலமாக ஸ்பைனல் கார்டுக்கு கொண்டு செலுத்தப்பட்டு, திரும்ப மோட்டார் நரம்புகள் மூலமாக செய்தி அனுப்பப்பட்டு, உங்களுடைய கை பின்னுக்கு இழுக்கப்பட்டு விடுகிறது. இந்த சம்பவமானது கையில் சூடு படுவதற்கு முன்னதாகவே அவ்வளவு துரிதமாக நடந்து விடுகிறது. இதை ஆங்கிலத்தில் சாதாரண ரிப்லெக்ஸ் † என்பர். இதற்கு மாறாக நிபந்தனையுள்ள ரிப்லெக்ஸ்‡ எனஒன்று இருக்கிறது. ஹார்மோனியத்தின் ஒரு கட்டையை அழுத்தினால் ஒரு கர்ணகடூரமானசப்தம் ஏற்படுகிறதென்று வைத்துக்கொள்ளுங்கள். இதை அழுக்குகிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பக்கத்திலுள்ளவர் கையை

* Sensory † Reflex. ‡ Conditioned Reflex.

ஊசியால் குத்துவதாக வைத்துக்கொள்ளுங்கள். இந்த நிலைமையில் சாதாரணமாக ஹார்மோனியத்தை வாசிக்கிறபொழுதும், மேற்குறிப்பிட்ட கட்டையை சமீபிக்கும் பொழுதும் பக்கத்திலுள்ளவர் அவரை அறியாமலே கையை எடுத்துக்கொள்வார். இந்தத்தடவை அவர் ஊசியால் குத்தப்பட்டிருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. இந்த உதாரணத்திற்குத்தான் நிபந்தனையுள்ள ரிப்லெக்ஸ் என்று பெயர்.

இன்னும் மேலும் சிலவிஷயத்தைக்கவனிப்போம். ஒரு மனிதன் பசியாக இருக்கும்பொழுது அவனுக்கு சாப்பாட்டு வாசனை எட்டிவிட்டால் அவனுடைய வாயில் எச்சல் ஊற ஆரம்பித்துவிடும். இந்த சம்பவம் சாதாரண ரிப்லெக்ஸ் ஆகும். சாதாரணமாக வாயில் எச்சல் ஊறுவது வெறும் நினைப்பினாலாகக்கூடிய காரியமல்ல. ஆனால் பகல் ஒருமணிக்கு சாப்பாட்டுக்காக மணி அடிக்கப்பட்டு, உடனே சாப்பாடு போடப்படுகிறது என வைத்துக்கொள்ளுங்கள். இதுமாதிரியான சந்தர்ப்பங்களில் சாப்பாட்டுமணி சப்தத்தைக் கேட்டதுமே நாக்கில் எச்சல் ஊற ஆரம்பித்துவிடுகிறது. இதுமாதிரி நாய்களிடம் பரீக்ஷைசெய்து பார்க்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட மணி அடிக்கிற நேரத்தில் சாப்பிடுகிற நாயைக் கவனித்தால் மேற்படி சாப்பாட்டு மணி அடித்த மாத்திரத்திலேயே நாயின் வாயிலிருந்து எச்சல் வழிவதைப்பார்க்கலாம். அப்பொழுது சாப்பாடு எதிரே இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. இந்த அனுபவத்தை எல்லோரும் பரீக்ஷைசெய்து பார்க்கலாம். ஆனால் சாதாரணமாக மணி அடித்து கால்மணி நேரத்திற்குப் பிறகுதான் நாய்க்கு சாப்பாடு போடுவ

தென்று வைத்துக்கொண்டால் நாயினிடத்தில் நிபந்தனையுள்ள ரிப்லெக்ஸ் ஏற்பட்டு மணி அடித்த கால் மணி நேரத்திற்குப் பிறகு வாயில் எச்சல் வழிவதைப் பார்க்கலாம்.

இதுமாதிரி நிபந்தனையுள்ள ரிப்லெக்ஸ்கள் சாதாரண அனுபவத்தில், அனுஷ்டானத்தில் இருக்கின்றன. நம்முடைய அநேக நடத்தைகள் இவைகளை ஒட்டியவைகளேயாகும். இதுமாதிரியான ஆராய்ச்சி இன்றைய உலகத்தை கவர்ந்திருக்கிறது.

விலங்குகளிடத்தில் திரவபதார்த்தத்தை தாங்கிச் செல்லுகின்ற டக்ட்லஸ் கிலாண்ட்ஸ்* என்றிருக்கிறது. இவைகளில் சில பரிசோதனைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதனால் மனிதனுடைய மனோநிலைமைக் குற்ற மாறுபாட்டை கவனிப்போம்.

நம்முடைய நடவடிக்கைகளுக்கும் எழுச்சிகளுக்கும் காரணம் நரம்புகளைப் பற்றியது மட்டுமல்ல. நம்முடைய சரீரத்திலேயே குறிப்பிட்ட கிலாண்ட்ஸ் இருக்கின்றன. அவைகள் இரத்த ஓட்டத்தில் கலக்கும்பொழுது குறிப்பிட்ட ரசாயனப் பொருள்களைச் சேர்க்கின்றன. அதனால் நம்முடைய எண்ணங்களும் நடவடிக்கைகளும் வெகுவாக பாதிக்கப்படுகின்றன. இந்த நரம்புகளில் முக்கியமானவைகள் கழுத்திலுள்ள ஆதாம் ஆப்பிளுக்கு சமீபமான தைராய்ட் கிலாண்ட்ஸ்களும்; மூளைக்கும், வாய்மேட்டுக்கும் மத்தியிலுள்ள

* Ductless Glands

பிட்சுடரிகிலாண்ட்ஸ்களும்; மூத்திர உருப்புக்களுக்கு சமீபமான அடர்னல் கிலாண்ட்ஸ்களும் உற்பத்திக் கருக்களின் கிலாண்டுலர் தசைநார்களுமாகும்.

இந்த கிலாண்ட்ஸ்களினால் ஏற்படும் பலாபலன்கள் என்ன? இதை தெரிந்துகொள்வதற்கு இந்த கிலாண்ட்ஸ்களை விலங்குகளுக்கு இல்லாது செய்து அதைபரிசீலனைசெய்து கவனிப்பதே பொருத்தமாகும். இதுமாதிரி நிறைய பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. இந்த அனுபவத்தினால் நம்முடைய எழுச்சிகளெல்லாம் நம்முடைய இரத்தத்தில் பாய்ச்சப்படும் ரசாயனப்பொருள்களால் ஏற்படுகின்றன என்று யாவருக்கும் தெரிகிறது. ஒவ்வொரு கிலாண்ட்ஸ்களிலும் ஏற்படுகிற ரசாயனப் பொருள்கள் மனிதன் உள்ளிட்ட பாலூட்டி வளர்க்கப்படும் எல்லா விலங்குகளிலும் ஒரேமாதிரியாகத்தான் இருக்கிறது. இது எல்லாவிதமான பரீட்சைக்கும் ஒத்துவருகிறது.

தைராய்டு கிலாண்ட்ஸ் நடவடிக்கைகளை கவனிப்போம். தைராய்டு கிலாண்ட்ஸ் ஒழுங்காக வேலை செய்யாத மனிதன் எப்பொழுதுபார்த்தாலும் அசமந்தமாகவே இருப்பான். உடல் நிலையும், மூளை நிலையும் வெகுமந்தமாகவே இருக்கும். இப்பேர்ப்பட்டவனுக்கு தைராய்டு கிலாண்ட்ஸின் முக்கிய பொருள்கள் கொடுக்கப்பட்டால் அவன் சாதாரண மனிதநிலையை அடைய முடியும். இதற்கு நாம் ஆடு மாடுகளுடைய தைராய்டு கிலாண்ட்ஸ்களிலிருந்து எடுத்துக்கொள்ளலாம். சில குழந்தைகள் கோளார் மூளையுள்ள குழந்தைகளாகவும் கோணல் மாணல் உள்ள குழந்தைகளாகவும், பிறவி

யிலேயே இருக்கக் காண்கிறோம். இதற்குக் காரணம் தைராய்டு கிலாண்ட்ஸ் வெகுவாக இல்லாமையே முக்கிய காரணமாகும்.

ஒருசிலர் இருபது — முப்பது வயதாகியுங்கூட சின்னஞ்சிறு குழந்தைகளின் நடவடிக்கைகளைப்போல நடப்பதையும், பார்வைக்கும் குழந்தைகள் மாதிரி தோற்றப்படுவதையும் நாம் பார்க்கிறோம். இவைகளுக்கான நிவர்த்திக்கு தைராய்டு கிலாண்ட்ஸ் மாத்திரைகளை உட்கொள்ளுவதால் பலனேற்படுகிறது.

ஒரு சிலருக்கு தைராய்டு கிலாண்ட்ஸ் அதிகப்படியாக இருப்பதையும் பார்க்கிறோம். இதனால் உடலும்—மனமும் கொஞ்சமும் அமைதி இல்லாமலே அவதியடைகிறது. இப்பேர்ப்பட்டவர்கள் அனேகமாக உடல்மெலிந்தவர்களாவார்கள். அதோடு எப்பொழுதும் பரபரப்பாக காணப்படுவார்கள். கண்களும் வெளியே பிதுங்கிக் காணப்படுவார்கள். இப்பேர்ப்பட்டவர்கள் தைராய்டு கிலாண்ட்ஸை குறைவுபடுத்திக் கொள்ளுவதால் நலம்பெற முடியும்.

ஒரு மனிதனை நாம் பயங்கொள்ளியாக்க வேண்டுமானல் – சாதாரணமாக முன்சொன்ன அட்ர்னல் தாதுப்பொருளை இன்ஜெக்ஷன் செய்தாலே போதும். உடனே அவன் முகம் வெளுத்துவிடும்; அவனுடைய தலைமயிர் நிமிர்ந்து நின்றுவிடும்; இரத்தக் கொதிப்பு அதிகரித்துவிடும்; இருதயம் வேகமாக அடிக்கும் சிறு குடலினுடைய சாதாரண நடவடிக்கைகள் நின்று

விடும். இதுமாதிரி மனிதனுடைய நடத்தையை நாம் மாற்றியமைக்க முடிகிறது.

முன்சொன்னவைகளைப்போல கருவுருப்புக்களை மாற்றுவதால் ஆண், பெண் தன்மையை மாற்றிவிடலாம். உதாரணமாக சிறுபிராயத்திலேயே கருவுருப்புக்கள் நீக்கப்படுமானல் அது வளர்வது கிடையாது. விலங்குகளிலிருந்து கருவுருப்பு நீக்கப்பட்டு மாற்றுக் கரு அமைக்கப்பட்டால், அது அதனுடைய குணத்தை பெற்றுவிடுகிறது. இதுமாதிரியான முயற்சியினல் இன்றையதினம் கினியா பன்றியானது பெண் பன்றியாக்கப்பட்டு பால் கறக்கவும் குழந்தைகளுக்கு பாலூட்டவும் பயன்படுத்தப்படுகிறது.

இதுமாதிரியான பரீக்ஷார்த்த ஏற்பாடுகளால் விலங்கினுடைய ஆண் பெண் தன்மை மாற்றப்படுவது சர்வ சாதாரணமாக ஆகிவிடுகிறது. இவைகள் அனைத்தையும் பார்க்கும்போது மனிதனுடைய மனமானது சாதாரண ரசாயனப் பொருள்களால் கூட்டப்பட்ட மனித தேகத்தின் நடத்தைகளே தவிர வேறில்லை என்று உணரலாம். நம்முடைய திரேசத்தில் ஜடவஸ்துவாகிய இரத்தம் குறைந்தாலும் கெட்டாலும் மனம் என்பது எங்கோ பறந்துவிடுகிறது. மூளையில் நிறைந்துள்ள நரம்புகளை பின்னப்படுத்திலுைம் அறிவும் மழுங்கிப்போய்விடுகிறது. கஞ்சா, சாராயம், கள் முதலிய வஸ்துக்களால் மனம் தடுமாறுகிறது. திரேகத் தள்ளாமையோடு மனமும் தள்ளாடிவிடுகிறது. நம் தூக்கத்தில் மனதைக் காணேம். நாம் கனவில் ஏதோ

100003

உளருகிறோம். விழித்த பிறகு ஒன்றும் தெரிவதில்லை. குளோரபாரம் என்ற மயக்க மருந்தால் மனது எங்கோ போய் விடுகிறது. ஒரு சில வியாதிகளாலும், மனிதனிடத்தில் மனது இல்லாமல்போய்விடுகிறது. இதுமாதிரி விஷயங்களிலிருந்து மனது என்ற ஒரு தனிப்பொருள் திரேகத்திலிருந்து கொண்டு நடிப்பதாக எவ்வாறு சொல்லமுடியும்? அறிவு என்பதும் திரேகத்தின் நடத்தைக் குறிய ஒரு காரியம் என்றே சொல்லவேண்டும்

திரேகத்திற்குறிய ஜடப்பொருள்கள் மனமென்று கூறும் நடத்தைகளைக் காட்டுகின்றது. ஆதலின் மனமென்பதும், சித்தென்பதும், ஆத்மா என்பதும், ஜடப்பொருள்களால் கூட்டப்பட்ட மனித திரேகத்தின் நடத்தைகளே ஒழிய வேறில்லை.

கண்ணாடியில் எதிர்ப்பட்ட வஸ்துக்கள் பிரதிபிம்பப்படுவதுபோல்,நமதுகண்ணில் பிரபஞ்ச வஸ்துக்கள் பிரதிபலிக்கின்றன. கண்ணாடி உடைந்து மண்ணானால் பிரதிபிம்பத்தை காட்டமுடியாததுபோல் திரேகம் அழிந்து சாம்பலானல் உலக வஸ்துக்கள், தெரிவதில்லை. அறிவும், அறிவில்லாமையும், உணர்வும் உணர்ச்சியில்லாமையும் உருவத்தை பொருந்தியிருக்கின்றது. இதுதான் மெட்டீரியலிசம்.* அதாவது ஜடவாதமென்று கூறுவர். இதுதான் நமக்கு எளிதில் விளங்கக்கூடிய தத்துவமென்று கூறலாம். மற்ற தத்துவங்கள் யாவும் சொல்லால் கட்டப்பட்ட மனோகற்பனைகளே ஒழிய வேறில்லை.

---

* Materialism.

R
31NSD

மீளாத காதல்

"மாக்ஸிம் கார்க்கியின்" சிறந்த நாவல்

○

தமிழாக்கியது

டி. என். ராமச்சந்திரன்.

○

சோப்புத் தொழிலில் ஈடுபட்டிருந்த பீட்டர், நடிகை ராணி லாரிஸாவைக் கண்டதும் காதல் கொள்ளுகிறான். அவளிடம் அழகும் இளமையும் இருந்தன. அவற்றால் அவள் அனைவரையும் கவர்ந்தாள். ஆகா! என்ன ஓய்யாரம்! என்ன சிங்காரம்! என்ன சாரீரம் என்று பக்தர்கள் பரவசமடைந்தனர். ஆனால் அவள் நாடகத்துக்கு உரியவள் அல்லள். ஆயினும் நாடகத் தொழிலில் பணத்தை வாரி இறைத்து நாடக அரங்கைச் சீர் திருத்த விரும்பினாள். அவள் பீட்டரை நண்பனாக பாவித்தாளே யொழிய காதலனாகப் பாவிக்கவில்லை. ஆயினும் பீட்டர் அவளை விடவில்லை. தன்னைக் காதலிக்கவில்லை என்றறிந்தும் அவன் லாரிஸாவைப் பின் தொடர்ந்தான். அவள் இட்ட பணிசெய்தான். அவள் உயிர் துறக்கும் வரையிலும் அவளிடமே இருந்துவந்தான். இக்கதையை ஆசிரியர் அழகுறச் சித்தரிக்கிறார். மொழிபெயர்ப்பும் சரியாக இருக்கிறது.

—சுதேசமித்திரன்

விலை ரூபாய் ஒன்று.

இமயப் பதிப்பகம்,

நாகப்பட்டினம்.